விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 புரட்டாதி 22 சனிக்கிழமை (08.10.2005) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 293

ராம்கோ
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தர தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமெந்து

# அமைதிப் பேச்சுக்கள் குறித்து ஆராய இயன் மார்ட்டின் கிளிநொச்சிக்கு விஜயம்

## தமிழ்ச்செல்வனுடன் விரிவாகப் பேச்சு

(கிளிநொச்சி)

**இலங்கைக்கு வருகை தரவுள்ள முன்னாள் கண்காணிப்புக் குழுத்தலைவர் டொன்புறுவ் ஹெவ்டேயும் சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆலோசகர் இயன் மார்ட்டினும் எதிர்வரும் 13 ஆம் திகதி கிளிநொச்சிக்குச் சென்று தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் தனித் தனியே பேச்சுக்களில் ஈடுபடவுள்ளனர்.**

**இலங்கையின் பாதுகாப்பு நிலைமைகள், யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துதல் என்பன குறித்து இச்சந்திப்பில் ஆராயப்படவுள்ளது.** **(12 ஆம் பக்கம் பார்க்க)**

## வாழைச்சேனையில் கைக்குண்டுத் தாக்குதல் சிறுவன் உட்பட இருவர் பலி; எண்மர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனைப் பிரதேசத்தில் உள்ள விநாயகபுரத்தில் நேற்றிரவு இடம்பெற்ற கைக்குண்டு மற்றும் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்களில் 14 வயதுச்சிறுவன் உட்பட இருவர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர்.

மேலும் எட்டுப்பேர் காயமடைந்து வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர்கள் செல்வராசா செல்வக்குமார் (வயது 14) மற்றும் ஆறுமுகம் பரமநாதன் (வயது 26) என அடையாளம் காணப்பட்டுள்ளதாக வாழைச்சேனைப்பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள், குறிப்பிட்ட இடத்தில் உள்ள கடை ஒன்றின் முன்பாக நின்று கொண்டிருந்த சமயம் அங்கு வந்த அடையாளம் தெரியாத சிலர் இரண்டு கைக்குண்டுகளை வீசியும் துப்பாக்கிப்பிரயோகம் செய்தும் இத்தாக்குதலை நடாத்திவிட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

இத்தாக்குதலில் இருவரும் ஸ்தலத்திலேயே பலியானார்கள். காயமடைந்த எட்டுப் பேரும் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச-4)

## 13 வேட்பாளர்கள் நேற்று வேட்புமனுத்தாக்கல் செய்தனர்

(கொழும்பு)


ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக 13 வேட்பாளர்கள் நேற்று வெள்ளிக்கிழமை காலை ராஜகிரியவில் உள்ள தேர்தல் செயலகத்தில் தமது வேட்பு மனுக்களை தாக்கல் செய்தனர்.

நேற்றுக்காலை 9மணி முதல் 11மணி வரை வேட்பு மனுத்தாக்கல் செய்வதற்கென ஒதுக்கப்பட்டிருந்த நேரத்தில 13 வேட்பாளர்களும் தமது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தனர்.

தேர்தலில் போட்டியிடுவதற்காக கட்டுப்பணம் செலுத்திய முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளரான செயினுள் ஆப்தீன் நஸர் அஹமட் வேட்பு மனுத்தாக்கல் செய்யவில்லை.

ஐக்கிய தேசியக்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்தமையை அடுத்து தங்கள் கூட்டமைப்பின் ஆதரவை ரணில் விக்கிரமசிங்காவிற்கு வழங்குவதற்கு முஸ்லிம் கூட்டமைப்பு முடிபு செய்துள்ளதையடுத்தே அவர் வேட்புமனுத்தாக்கல் செய்யவில்லை.

காலை 11 மணிமுதல் 11.30மணிவரை எதிர்ப்புக்கள் தெரிவிப்பதற்கான காலம் ஒதுக்கப்பட்டிருந்தது. வேட்பு மனுத்தாக்கல் செய்த எந்த வேட்பாளருக்கும் எதிர்ப்பு இல்லாததால் இவர்கள் அனைவரும் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்தார். (ச-4)



பிரதான இரு கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளர்களான மகிந்த ராஜபக்ஷவும் ரணில் விக்கிரமசிங்கவும் தேர்தல் திணைக்களத்தில் வேட்பு மனுத்தாக்கல் செய்யச் சென்றபோது இன்முகத்துடன் கைலாகு கொடுத்து பரஸ்பரம் வாழ்த்துத் தெரிவிப்பதை காணலாம்

## யாழ்.பிரதான வீதியில் வைத்து இந்து மதகுரு சுட்டுக் கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதான வீதியில் நேற்றுக்காலை 9.30மணியளவில் இந்து மதகுரு ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சுட்டுக்கொல்லப்பட்டவர் கொழும்புத்துறையைச் சேர்ந்த, கொழும்புத்துறை இலந் தைக்குளம் பிள்ளையார் ஆலய நிர்வாகியும் இரண்டு பிள்ளைகளின் தந்தையுமான கந்தசாமி செந்தில்குமரன் (வயது 42) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தனது பிள்ளைகளை பாடசாலைகளில் இறக்கி விட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த சமயம் யாழ்.பிரதான வீதியும் ,கோயில் வீதியும் இணையும் சந்தியில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். அவரது தலை , முதுகு ,கை என்பவற்றில் ஆறு குண்டுகள் பாய்ந்துள்ளன.

சுட்டுக்கொல்லப்பட்டவர் முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனின் அலுவலகத்திலும் பின்னர் டக்ளஸ் தேவானந்தாவின் அமைச் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மோட்டார் சைக்கிள் விபத்து குடும்பஸ்தர் ஸ்தலத்தில் பலி

### வேலணை துறையூரில் சம்பவம்

(புங்குடுதீவு)

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மதிலுடன்மோதி விபத்திற்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மற்றொருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்று மாலை 4மணியளவில் வேலணை துறையூரில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து புங்குடுதீவு நோக்கிச்சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மதிலுடன் மோதியதில் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார். மற்றையவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளை (12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com
எக்ஸ்போ ஏயார்
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...



நடுவு நிலை தவறா நன்னெறி காத்தும் உங்கள் நாளிதழ்

# மாணவர்கள் விரும்பிக் கற்க ஆசிரியர் வழிகாட்ட வேண்டும்

(காரைநகர்)

காரைநகர் பிரதேசத்தில் கல்வி நிலை, பிரதேச வளர்ச்சி, இரண்டிலும் நல்ல நிலை உருவாகியுள்ளது. இதனை தக்கவைப்பதற்கு இன்றைய-சமூகம் முன்வரல் வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார் யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை.

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலய 'சயம்பு மலர்' வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பழைய மாணவர் சங்கத் தலைவர் பண்டிதர் மு.சு. வேலாயுத பிள்ளையின் தலைமையில் நடைபெறற இவ் விழாவில் பிரதம விருநதினராக யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையும், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலய கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், தீவக கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் வ.இராதாகிருஷ்ணன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

பேராசிரியர் தொடாந்து உரையாற்றும்போது காரைநகர் பாடசாலைகளில் போதியளவு ஆசிரியர்கள் நிய மிக்கப்பட்டுள்ளாகள். அத்துடன் ஏனைய பௌதீக வளங்களும் ஓரளவு நிமிர்ந்துள்ளன வருங்கால கல்வி உலகசார் பொருளாதார கட்டமைப்புடன் கூடிய அறிவுசார் கட்டமைப்பாக மாறிவிட்டது. இதனை அடைவதற்கு மாணவர்கள் மூன்றாம் தரக்கல்வியைப் பெற்றுக் கொள்ளவேண்டும் இதன் மூலம் மனித வளத்தை அறிவு விருத்தியாக்குவதே நோக்கமாகும்.

அன்றைய காலத்தில் ஐந்தாம் தரம் கற்றால் போதும் கல்வி கற்றவர் என்பார்கள் இடைக்காலத்தில சாதாரண தரம் சித்தி எய்தினால் கல்வி கற்றவர் என்றனர். ஆனால் தற்போது பட்டதாரியாக நிறைவு செய்தால் மட்டுமே கல்வி கற்றவர் என்று கூறுமளவிற்கு கல்வி நிலை முன்னேறி விட்டது. இன்று வெளிவந்து கொண்டிருக்கும் பட்டதாரிகளை எவ்வாறு பயனபடுத்துவது என்று மேல்மட்ட நிலையில் உள்ளவர்கள் மயக்கநிலையில் உள்ளனர். தற்போது ஆசிரியர்களாக தெரிவு செய்யப்பட்டவர்கள் மாணவாகளை சரியான வழியில் வழிநடத்தல் வேண்டும், ஒரு ஆசிரியர் வழிநடத்தல், வழிகாட்டல், எதிர்காலத்தை எதிர்வு கூறல் போன்ற செயற்பாட்டுடன் கற்பித்தல் வேண்டும் கற்பித்தலிலும் பார்க்க கற்க விருப்பமூட்டி வழிகாட்டல் வேண்டும்.

இப்பொழுது காரைநகர் தனி உதவி அரச அதிபர் பிரிவாக காணப்படுவதுடன் தனியான கமநல சேவை நிலையம் என்பனவும் அமையப் பெற்றுள்ளது. ஆதலால் காரைநகர் மாதிரி கிராமம் மாறவேண்டும். சிறந்த வளமான அபிவிருத்தியடைந்த பிரதேசமாக உருவாகவேண்டும்.

இதற்கு வருங்காலத்தில் புதிய தகவல் தொழில் நுட்பம் வளர்ச்சியடையும்போது சிறிய நுன் திட்டங்கள் மூலம் அபிவிருத்தி செய்ய வேண்டும். சுற்றுச் சூழலியல்கல்வி, பிரதேச வளர்ச்சி இரண்டிலும் நல்ல நிலை உருவாகியுள்ளது இதனை தக்கவைப்பதற்கு இன்றைய சமூகம் முன்வரவேண்டும் எனவும் தெரிவித்தார்.

இம் மலர் வெளியீட்டு விழாவில வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், தீவக கல்வி வலய பிரதி கல்விப் பணிப்பாளர் வ.இராதா கிருஷ்ணன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். (அ-246)

# சுகாதாரம் பேணக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையினரால் உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு யாழ்.நகரில் புல், பூண்டுகளை அகற்றல், வடிகால்களை துப்பரவு செயதல் போனற சுகாதார பணிகள் நடைபெற்று வருகின் றன. இதற்கு சகல தரப்பினதும் ஒத்துழைப்பு கேட்கப்பட்டுள்ளது.

கழிவுப்பொருட்களை அவற்றுக்குரிய தொட்டிகளில போடுமாறும் நவீன சந்தையில் ஆண்கள், பெண்களுக்கு என தனித்தனியாக அமைக்கப்பட்டுள்ள மலசல கூடங்களை உரிய முறையில் பயனபடுத்துமாறும் வீதியோரங்களில் அமைக்கப்பட்டு குழாய்களின் மூலம் விநியோகிக்கப்படும் குடிதண்ணீரை தேவைக்கு ஏற்றவாறு சிக்கனமாக பயன்படுத்துமாறும் பாவனையாளர்களை யாழ்.மநாகர சபையினர் கேட்டுள்ளனர். (அ-36)

# மழை இன்மையால் கடும் வரட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இவ் வருடத்துக்கான பருவப் பெயர்ச்சி மழை இதுவரை பெய்யாமல் இருப்பதால் பெரும் வரட்சி நிலை தோன்றியுள்ளது. இதனால் பெரும்போக நெற்செய்கையை விவசாயிகள் இன்னமும் ஆரம்பிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் மற்றும் தீவகப் பிரதேசங்களிலுள்ள நெல்வயல்கள் யாவும் இன்னமும் உழுது பண்படுத்தப்படாமல் இருக்கின்றன.

அதேசமயம் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சி காரணமாக பொதுமக்கள் மற்றும் கால்நடைகள் நோய்வாய்ப்பட்டு வருகின்றன.

இங்குள்ள குளங்களில் மற்றும் ஏரிகளில் நீரின் அளவு பெருமளவு குறைந்த நிலையில் காணப் படுன்றது அத்துடன் தீவகப் பிரதேசத்தில் குடிநீருக்கான பற்றாக்குறை தீவிர மடைந்துள்ளதாகவும் அறியப்படு கின்றது. இது இவ்விதமிருக்க, மழை பெய்தவுடன் நெல்லை விதைப் பதற்கு விவசாயிகள் தயார் நிலையில் இருப்பதாகவும் தெரிய வருகின்றது. (த-16)

# கசூர்னா கடற்கரையில் இளைஞர் அட்டகாசம்

காரைநகர் கசூர்னாக் கடற்கரைக்கு உல்லாசப் பயணிகள் போல் செல்லும் இளைஞர்கள் ஏனைய உல்லாச பயனிகளிற்கு பல அசௌகரியங்களை ஏற்படுத்துவதுடன் வீதியில் செல்லும் பயணிகளையும் தகாத வார்த்தைகளால் தொல்லை கொடுத்துவரும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாகப் பலதரப்பினாலும் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

யாழ்.குடாநாட்டில் மழைபெய்யாது வெய்யில் அதிகரித்துள்ளதால் காரைநகர் கசூர்னாக் கடற்கரைக்கு செல்வோரின் தொகை அதிகரித்துள்ளது. இந்த நிலைமையைப் பயன்படுத்திச் சில இளைஞர்கள் கசூர்னாக் கடற்கரையில் உல்லாசப் பயணிகள் மத்தியில் மது அருந்திவிட்டு அட்டகாசம் செய்வதுடன் பல்வேறு விதமாக தொல்லைகொடுத்து வருகின்றனர். அத்துடன் மதுபோதையில் வீதியால் செல்லும் போது வெற்று மது பானப் போத்தல்களை வீதிகளில் எறிந்து உடைத்துவருவதுடன் வீதிகளின் குறுக்கே நின்று போக்குவரத்திற்கு இடையூறும் விளைவித்து வருகின்றனர். இவர்களது அட்டகாசமான போக்கைக் கட்டுப்படுத்துவதற்கு எவரும் முன்வராததையிட்டு பொதுமக்கள் பலரும் விசனம் தெரிவித்துள்ளனர். (து-246)

# காந்தி ஜெயந்தி தினம்

மகாத்மா காந்தி அடிகளின் ஜெயந்தி தினம் அகில இலங்கை காநதி சேவா சங்கத்தினால் கடந்த 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் சிறப்புற அனுஷ்டிக்கப்பட்டது.

அன்றைய தினம் மு.ப.10மணியளவில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள காந்தியடிகளின் உருவச்சிலையடியில் சங்கத் தலைவர் சோ.க.தம்பிப்பிள்ளை தலைமையில் மௌன வணக்கத்துடன் ஜெயநதிதின நிகழ்வு ஆரம்பமானது. மில்க்வைற் தொழிலதிபர் இ.தவகோபால், ஓய்வுபெற்ற அதிபர் ஆ.வடிவேலு ஆகியோர் அன்னாரினது உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்தனர். அடிகளார் பற்றிய நினைவுரையை எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி நிகழ்த்தினார். தொடர்ந்து காந்தீயத் தொண்டர்களும் பொது மக்களும் மலரஞ்சலி செலுத்தினர்.

மாலை 3 மணிக்கு மருதனார்மடம இராதநாதன் கல்லூரி மண்டபததில 'சத்திய விஞ்ஞானம்' என்ற நூல்வெளியிட்டு வைக்கப்பட்டது இந் நிகழ்வில் காந்தீய அபிமானிகளும பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டனர். காந்தி அடிகள் பற்றிய சிந்தனைகளைச் சபையோரும் பகிர்ந்து கருத்துப் பரிமாற்றம் மேற் கொணடமை இங்கு குறிப்பிடத்தக்கது. (து)

# அடையாள அட்டை

தென்மராட்சி தெற்கு மறவன் புலோ உயர் பாதுகாப்பு வலயத்தில் அனுமதிக்கப்பட்ட லயஸ் பகுதியில் காலபோக நெற்செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகள் புதிய அடையாள அட்டையைப் பெற மூன்று புகைப்படங்களுடன் முந்திய அடையாள அட்டையையும் சமர்பிக்க வேண்டும் அல்லது பிரதேச செயலர் கிராம அலுவலரின் சிபார்சு செய்த படத்துடன் கோவிலாக்கண்டியில் உள்ள மக்கள் தொடர்பு காரியாலயத்தில் தொடர்பு கொள்ளுமாறு அப்பகுதி இராணுவ சிவில் அதிகாரி மேஜர் சாந்த பெரேரா அறிவித்துள்ளதாக இப் பகுதி விவசாய சம்மேளனத்தினர் தெரிவித்துள்ளனர். (த-29)

# இராசி பலன்

08.10.2005
(புரட்டாதி 22, சனிக்கிழமை)
பஞ்சமி பிற்பகல் 2.56 மணி வரை
அனுசம் முற்பகல் 7.39 மணி வரை
இராகுகாலம் 09.02-10.32 மணி வரை
சுபநேரம் 3.02-4.32 மணி வரை
நான்காம் புரட்டாதிச் சனி

| | |
|---|---|
| மேடம் | அபகீர்த்தி, காரிய தடங்கல், உறவினர் வெறுப்பு, தர்மம். |
| இடபம் | காரிய சிந்தை, பெருமையடைதல், போசன சுகம், குடும்ப நலம். |
| மிதுனம் | தொழில் சிந்தை, சுவாரஸ்யம், காரிய அனுகூலம், சத்துரு ஜெயம். |
| கடகம் | வியாபார நன்மை, ரோக நிலை, உறவினர் சந்திப்பு, போசன சுகக்குறைவு. |
| சிங்கம் | மாதா சுகம், புதிய விடயம், முயற்சி தாமதம், ஆரோக்கியக் குறைவு. |
| கன்னி | கூட்டு முயற்சி, போசனசுகம், உற்சாகம், பெருமையடைதல். |
| துலாம் | விதண்டா வாதம், காரிய தாமதம், அதிக செலவு, அமைதிக்குறைவு. |
| விருச்சிகம் | கற்பனை மிகுதி, போசன சுகம், பெரியோர் உதவி, முயற்சி கைகூடும். |
| தனுசு | அமைதிக்குறைவு, சயனசுகக்குறைவு, காரிய தாமதம், சுப செலவு. |
| மகரம் | தெய்வ சிந்தை, சகோதரர் உதவி, எடுத்த காரியம் கைகூடும், தனலாபம். |
| கும்பம் | மேன்மை, போசன சுகம், நல்ல முயற்சி, உற்சாகம். |
| மீனம் | புதிய திட்டமிடல், கட்டுப்பாடு, பிதா சிந்தை, முயற்சி தாமதம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
வளவன்

# சிறுவர் முதியோர் தினவிழா

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்கான சிறுவர் முதியோர் தினவிழா இன்று சனிக்கிழமை காலை 10மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸவரன் தலைமையில் பருத்தித்துறை சிவன்கோவில் பர்வதவர்த்தனி கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக பருத்தித்துறை மாவட்டநீதிபதி க.அரியரத்தினமும் கௌரவவிருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமியும் சிறப்பு விருந்தினராக பிரதிக்கல்விப் பணப்பாளர் ஆர்.இராசேந்திரமும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இநநிகழ்வில் கவிதை, கட்டுரை போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில் வழங்கப்படுவதோடு முதியோர் கௌரவிப்பு பரத நிருத்தியாஞ்சல நடனம், நாடகம போன்ற கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (த-35)

# குடிநீர்த் தட்டுப்பாடு

(மானிப்பாய்)

வலிமேற்கு பிரதேச சபையின் பிரிவுக்குட்பட்ட பொன்னாலைக் கிராமத்தில் கடந்த சித்திரை மாதம் தொடக்கம் தண்ணீர்த் தட்டுப்பாடு நிலவி வருகிறது. 95ஆம் ஆண்டு இடம்பெயர்வுக்கு பின் பூரணமாக கடற்படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள இங்கு சமாதான உடன்படிக்கை ஏற்பட்டபின்னும் தாம் நினைக்கும் சட்டத்தினையே இன்றும் கடற்படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

குடிநீர் தட்டுப்பாடு நிலவும் பொன்னாலைக்கிராமத்தில் ஊரின் மததியில் உள்ள பிரதேசசபைக்கு சொந்தமான கிணற்றில் இருந்து குழாய்மூலம் விநியோகிக்கப்பட்டு வந்தது. பின்னர் போரினால் பழுதடைந்த தண்ணீர்த்தாங்கிகளை ஜி.ரி.சற் உதவியுடன் புனரமைத்து தண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

95ஆம் ஆண்டுக்கு பின்னர் கடற்படையினர் இக் கிணறுகளில் இருந்து நீரை தமது தண்ணீர் பவுசர் மூலம் எடுத்துவந்தனர். பின்னர் கடந்த சித்திரை மாதம் தொடக்கம் தண்ணீா இறைக்கும் இயந்திரம் பழுதடைந்ததுடன் பொது மக்களின் தண்ணீா விநியோகத்தை நிறுத்தி தமக்கு மட்டும் தண்ணீரை எடுத்துகொள்கின்றனர். தண்ணீர் இறைக்கும் இயந்திர அறைத் திறப்பினையும் அவர்களே வைத்துக்கொண்டுள்ளதாகவும், மக்கள் கூறுகின்றனர்.

இதைவிட பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்திற்கு செல்லும் தண்ணீர்க்குழாய்களில் இருந்து இராணுவத்தினர் நீர் எடுப்பதால் ஆலயத்தினர் கூட ஆலய தேவைக்கு தண்ணீர் இன்று ஒருமையில் தொலைவில் உள்ள தனியாரினது கிணற்றில் தண்ணீர் பெறுகின்றனர்.

இது தொடர்பாக ஊர்ப் பொது அமைப்புக்கள், ஊர் மக்கள் இணைந்து பலமுறை வலிகாமம் மேற்கு பிரதேசசபையிடம் முறையிட்ட போதும் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையென மக்கள் தெரிவித்துள்ளனர். (28)

## அன்பு மாணவர்களே!

நவராத்திரி பூசையையொட்டி

'நவராத்திரிப் பாமாலை'

பகுதியை வலம்புரி வெளியிடுகிறது. மாணவர் களாகிய உங்களின் கவிதையும் இதில் இடம்பெற வேண்டு மாயின், நான்கு வரிகளுக்கு மேற்படாத கவிதைகளை ஆக்கி பாடசாலை, கற்கும் தரம், பெயர் ஆகிய விபரங்களுடன் "வலம்புரி"

இல. 03, இரண்டாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பி வைக்கவும்.

குறிப்பு:- கவிதைகள் மாணவர்களின் சொந்த ஆக்கமாக இருப்பது அவசியம்.

(ஆ.ர்)

# சரிந்தது ஸாஹித்தியப் பெருஞ் சைலம்

**"கற்பனை வளர்தல் வேண்டும்**
**கவிநயம் பிறப்பில் வேண்டும்.**
**இப்பெரும் மனிதன் தானே இயற்**
**கையில் கவிஞனாவான்"**

என்று கவியரசன் கண்ணதாசன் பாடியதற்கமைய கவியரசமும், கலைநயமும் அணிசெய்ய சொற்சுவை, பொருட்சுவை மிக்க கவிதை மழைபொழிந்த ஈழத்தாய் பெற்ற கலைக் குரிசில் வீரமணி ஐயர் மறைந்து இன்னுடன் இரண்டாண்டுகள் ஆகின்றன.

யாழ்ப்பாணம் இணுவையூரைச் சேர்ந்த அமரர்களான பிரம்மஸ்ரீ ம.த.நடராஜா ஐயர், ஸ்ரீமதி சுந்தராம்பாள் தம்பதியினருக்கு 1931ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15ஆம் நாள் இரண்டாவது புதல்வனாக பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை இணுவில் சைவப்பிரகாச வித்தியாலத்திலும் (தற்போதைய இணுவில் இந்துக்கல்லூரி), உயர் கல்வியை மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் கற்றார். சிறுவயது முதலே கலையார்வம் கொண்ட இவர் தனது 22ஆவது வயதில் தமிழகம் காலஷேத்ர நடனப் பள்ளியில் இசைநடனம் பயின்றார். அங்கே கலைஞர் அருண்டேல் ருக்மணி அம்மையாருடைய அபிமான மாணவனாக சகல திறமைகளும் கொண்டு கற்றுத் தேறினார்.

பின்பு தனது தாய் நாடு திரும்பிய அவர், தான் கல்விகற்ற மானிப்பாய் இந்துக்கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றினார். தொடர்ந்து பலாலி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் 33 வருடங்கள் விரிவுரையாளராகப் பணியாற்றினார், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இவருக்கு நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வு ஒன்றில "ஸாஹித்ய ஸாஹரம்" என்ற சிறப்புப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

கொடுத்த தலைப்பில் நினைத்தவுடனே கவிபாடும் ஆற்றல் கைவரப் பெற்ற "வரகவி" யான இவர் கொஞ்சு தமிழில் மிஞ்சி விளையாடிய சந்தக் கவியின் சொந்தக்காரனாவார். அவருடைய கவிப்



படைப்புக்கள் முற்றுமுழுதாக மரபு தழுவியனவாகவும் சந்தம் கொஞ்சி விளையாடும் தன்மையுடையதாகவும் சமயங்களில் நவரசம் ததும்புவனவாகவும் படைக்கப்பெற்றுள்ளன.

இவருடைய "கற்பகவல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்" என்று ஆரம்பிக்கும் ஆனந்த பைரவி இராகத்தை பல்லவியில் கொண்டமைந்து நான்கு இராகங்கள் முத்திரை அமைக்கப்பெற்ற இராகமாளிகை கீர்த்தனை தென்னிந்திய இசை வல்லுனர் ரி.எம்.சௌந்தரராஜனால் அளித்த மிக முக்கிய பேட்டி ஒன்றில் தான் பாடிய பாடல்கள் அனைத்திற்குள்ளும் உள்ளம் உருகிப் பாடிய பாடல் யாழ்ப்பாணம வீர மணிஜயரது இப்பாடல் தான் என்று கூறியுள்ளார், திருமைலாப்பூர் கபாலீஸ்வரர் ஆலயத்தின் உட்சுவரில் இப்பாடல் இப்போதும் காணப்படுகிறது.

1957ஆம் ஆண்டு "திருமயிலைக் குறவஞ்சி" என்ற கலை நூலை வெளியிட்டு பெருமதிப்புக் கிடைக்கப் பெற்றதுடன், 1965ஆம் ஆண்டு நல்லை ஆதீன சஞ்சிகையான அருளமுதத்தில்

**"சாரங்கன் மருகனே சாவேரி பாலாகனே**
**மோகனே குமரனே நாயகி நாயகனே"**

என்ற பல்லவியைக் கொண்ட 16 இராகங்களில் அமைந்த இராக மாலிகைக் கீர்த்தனையை வெளியிட்டு பெரும் புகழ் கிடைக்கப்பெற்றார்.

1982ஆம் ஆண்டு வட இலங்கை சங்கீதசபை பொன்விழாவில் "கவி மாமணி" என்ற சிறப்புப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 1984ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28ஆம் நாள் அமரர் சேர்.பொன். இராமநாதன் அவர்களது 54ஆவது நினைவு தினத்தில் நடைபெற்ற சிறப்புக் கவியரங்கத்தில் கலாநிதி சொக்கலிங்கம் (சொக்கன்), பண்டிதை அமிர்தாம்பிகை, முல்லைமணி சுப்பிரமணியம், அமரர் ஷண்முககுமரேசன் அவர்களுடன் தலைமைக் கவிஞராக இருந்து "இராமநாத வள்ளலின் தொண்டுகள்" என்ற தலைப்பில் பொழிந்த கவித்தேன் மழை இசைத் தட்டில் கேட்கும் போது இப்பொழுதும் மெய் சிலிர்க்க வைப்பதாக உள்ளது.

இயல், இசையில் இவருக்கு இருந்த மேன்மையால் இயலிசை வாரிதி, மஹா வித்துவான், என்ற சிறப்பு விருதுக்ள் வழங்கி பாராட்டப்பெற்றார். 1999ஆம் ஆண்டு ஒக்டோபர் 06ஆம் நாள் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கௌரவ முதுமாணி (M.A) பட்டம் வழங்கிக கௌரவிக்கப்பட்டார்.

## மறைந்தும் மறையாத கவிமாமணி வீரமணி ஐயர்

நடனத்துறை, கவித்துறையில் மட்டுமன்றி இசைத் துறையிலும் பாண்டித்தியம் பெற்றிருந்த கவி மாமணி 72மேளகர்த்தா இராகங்களுக்கும், 175 தாளங்களுக்கும் இன்னும் இதற்கு மேலாகவும் உருப்படிகளை ஆக்கியுள்ளார். பல இராகங்களின் பெயர்களை முத்திரையமைத்துப் பாடியுள்ளமை இவருடைய ஆக்கங்களின் சிறப்பம்சமாகும்.

கர்நாடக இசை, நடனம் ஆகிய இரண்டிலும் டிப்ளோமா (Dou ble Diploma in Dance & Music) தகைமைகளைக் கொண்டிருந்த வீரமணி ஐயர் தனது அரச பணியின் நிறைவில் யாழ்ப்பாணப பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் வருகை விரிவுரையாளராகப் பணியாற்றினார். 2001ஆம் ஆண்டு மார்கழி மாதம் இராமநாதன நுண் கலைபபீடத்தில் நடைபெற்ற தென்னிந்திய கலை விற்பன்னர்களான மாம்பலம் சிவா, நடராஜ் சகோதரர்கள் (நாதஸ்வரம்), திரும்புங்கூர் ரி.ஜி.முத்துக்குமாரசாமி, இராமநாதன், (தவில்) ஆகியோரது இசை விருந்தொன்றின் இடையில் அவாகள் "சக்கரவர்த்தி" பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட போது கவி மாமணி "முத்தைத்திருபத்தித்திரு..." என்று தொடங்கும் திருப்பு கழின சந்தத்தில் கவியாசி வழங்கி கேட்போரை மெய்சிலிர்க்க வைத்தார்.

தமிழிசை வரலாற்றில் தமிழுலகமே ஏற்றுக்கொண்ட மஹாவித்துவான் வீரமணிஜயா ஈழத்தின் ஒரு பெரும் சொத்து. கவித்துறையில் யாரும் நெருங்க முடியாத அளவற்கு உன்னதமான படைப்புக்களை படைத்துச் சென்றிருக்கும் ஒரு பெரும படைப்பாளி பூவுலகில் அவருடைய படைப்பாற்றலைப் பொறுக்க முடியவிலலைப் போலும 2003ஆம் ஆண்டு ஒக்டோபர் 8ஆம் நாள் காலையிலே காலன் அவருயிரைத் தன தாக்கிக் கொண்டான். ஈழம் மட்டு மல்ல தமிழுலகமே கண்ணீா சிந்த ஸஹித்யப் பெருஞ் சைலம் சரிந்தது.

**குமரேசன் புரந்தரன்**

# கடற்படையின் துணைப்படை 5 வது அணியினர் பயிற்சி நிறைவு

(கிளிநொச்சி)

லெப்.கேணல் மறவன் பயிற்சிப் பாசறையில் தமிழீழக் கடற்படையின் துணைப்படையின் ஐந்தாவது அணியினர் கடந்த புதன்கிழமை பயிற்சிகளை நிறைவு செய்து வெளியேறினர்.

இந்நிகழ்வில் பொதுச் சுடரினை யாழ்.மாவடடக் கடற்படைத்தளபதி கலாப்த்தன் ஏற்றிவைக்க. தமிழீழ தேசியக்கொடியின்னை பயிற்சி ஆசிரியர் யசோ ஏற்றினார்.

லெப்.கேணல் மறவனின் திருவுருவப்படத்திற்கு பயிற்சி ஆசிரியர் பூவண்ணன் ஈகைச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து பன்னிரு வேங்கைகளின் திருவுருவப்படத்திற்கான ஈகைச்சுடர்களை பெற்றோர்கள், போராளிகள் பயிற்சி ஆசிரியர்கள் மற்றும் தளபதிகள் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து தலைமையுரை, நினைவுரை, சிறப்புரை ஆகியன இடம்பெற்றன.

இவ்வுரைகளைத் தொடர்ந்து தமிழீழத் தேசியத்தலைவருக்கான நினைவுக்கேடயம், தமிழீழக் கடற்படையின் விசேட தளபதி கேணல் சூசையிடம் வழக்கப்பட்டது. (ந-4)

# வஞ்சனைக்குப் பலியான தளபதி சங்கர் நினைவுத் தூபித் திறப்பு விழாவில் பாராட்டு

(முல்லைத்தீவு)

அரசாங்கப் படையைப் போல எமது படை கூலிப்படை அல்ல சுதந்திர வேட்கையும் மனோதிடமும் கொண்ட மறவர் படை. தமிழீழவிடுதலைப் போராட்டத்தில் அரசாங்கத்தை கதிகலங்க வைத்துள்ள படை எமது விமானப்படையே. பல வருடங்களுக்குமுன் முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தின் மீது விமானம் மூலம் மலர் தூவப்பட்டபோது எல்லோரும் திகைப்படைந்தார்கள்.

புலிகளிடம் விமானம் உண்டா என ஆச்சரியப்பட்டார்கள். அந்த விமானப்படையின் தலைவன் சங்கர், சதிகாரரின் செயலால் கொல்லப்பட்டு விட்டான்.

விமானப்படை தளபதி லெப்டினன் கேணல் சங்கரின் நினைவு நாளை ஒட்டி நடைபெற்ற விழாவின் போது அவர் கொல்லப்பட்ட இடமான கச்சிலைமடுவில் அமைக்கப்பட்ட நினைவு தூபியை திரை நீக்கம் செய்துவைத்து சிறப்புரையாற்றிய போதே வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினம் இவ்வாறு தெரிவித்தார்.

இவ் விழாவிற்கு செய்தித் தொடர்பாளர் வேதவனம் தலைமை வகித்தார். கனகரத்தினம் தொடர்ந்து பேசுகையில், எமது போராட்டம் தொடங்கிய காலம் தொடக்கம் எமது தலைவரின் வலது கையாகத்திகழ்ந்து தனது கடமையை மிக இரகசியமாகவே வைத்து விமானப் படையை உருவாக்கி அதனை வளர்ச்சியடையச் செய்து சாதனை படைத்ததாலேயே இன்று அரசாங்கமே கதிகலங்கி நிற்கின்றது. இந்த சாதனைக்கு வழியமைத்த பெருமை சங்கரையே சாரும்.

எமது போராட்டத்திற்கு மாத்திரம் சங்கர் தனியே ஈடுபடவில்லை. அவரது குடும்பமே போராட்டத்தில் இணைந்து செயற்பட்டது. எமது இந்த போராட்ட வரலாற்றில் மிகவும் திறமையும் மதிநுட்பமும் மிக்கவர் சங்கர். இப்பேறபட்ட ஒருவரின் இழப்பு உண்மையில் ஈடு செய்ய முடியாத ஒன்று. நாங்கள் இராணுவ ரீதியிலும் மிக்க பலமாக இருந்ததால்தான் அரசாங்கம் எம்மை பேச்சுவார்த்தைக்கு அழைக்கின்றது. எம்மிடம் எமது தேசியத்தலைவர் உருவாக்கிய தரைப்படை, கடற்படை, விமானப் படை மட்டுமல்ல கரும்புலிகள் படையும் இருக்கிறது. இதுவரை நாங்கள் விடுதலைப் போராட்டத்திற்காக போராட்ட வெற்றிககாக எத்தனை எத்தனையோ தீயாகிகளை இழந்துவிட்டோம். அவர்களின் தியாகம் தான் எமது வெற்றிக்கு அடிப்படை எனவும் நாம் ஏமாறமாட்டோம்.

எம் தலைவரின் காலத்தில் தமிழ்ழும் அடைந்தே தீருவோம் என்பது உறுதி. (து-128)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகள் இன்னும் இனங்காணப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இயங்குகின்ற அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களையும் இணையத்தில் அங்கத்துவம் பெறத்தக்கதாக ஆக்கிக்கொள்ளவேண்டும். அதன் மூலம் தான் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயல்பாடுகளையும், சேவைகளையும் திட்டமிட்ட முறையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குச் சேரச்செய்ய முடியும் இத்தகைய நிலையை ஏற்படுத்த யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய நிர்வாகம் முன்வரல் வேண்டும்.

இவ்வாறு இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் பங்காளித்துவ அபிவிருத்தி முகாமையாளாரான க.மகேந்திரன் பருத்தித்துறை தம்பசிட்டியில் கடந்த புதன் கிழமை அறவழிப் போராட்டக்குழுவின் வாழ்வதாரத்திட்ட அலுவலகத்தினை சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைத்து உரையாற்றும் போது தெரிவித்தார்.

அறவழிப் போராட்டக் குழுவின் தலைவர் டாக்டர்.எஸ்.எஸ்.அருளானந்தம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இணையத் தலைவர் பொ.விக்கினேஸ்வரன், சுனாமி செயலகத்தின் நிர்வாகப் பொறுப்பாளர் எஸ்.சந்திரன், பனை அபிவிருத்திச் சபையின் ஆலோசகர் வீ. ஜீ.தங்கவேல், சர்வோதய மாவட்ட இணைப்பாளர், ஏ.கே.சிவசுப்பிரமணியம் உட்பட வேறு பலர் பங்கு கொண்டிருந்தனர்.

பங்காளித்துவ அபிவிருத்தி முகாமையாளர் க.மகேந்திரன் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது,

ஆழிப்பேரலையினைத் தொடர்ந்து மாவட்டத்தில் 60க்கு மேற்பட்ட சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் பணிசெய்வதாகக் கூறப்படுகினறது.

இருப்பினும் கூட பாதிக்கப்பட்ட குடும்பங்களின் உண்மையான தேவைகளும், பிரச்சினைகளும் இன்னமும் தீர்க்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட குடும்பங்களின் உண்மையான தேவைகள் இனங்காணப்படவில்லை.

தேவைகள் உரியவாறு இனங்காணப்படாத நிலையில் எவ்வாறு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும் மாவட்டத்தில் யுத்தம் இடம்பெற்ற வேளையில் ஒரு சில அரச சார்பற்ற நிறுவனங்களே இயங்கின. ஆயினும்கூட, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தன்னிறைவான உதவிகளையும் சேவைகளையும் திட்டமிட்ட முறையில் வழங்கின.

எமது பிரதேசத்தில் வேறொரு அனர்த்தம் இடம்பெறுமாயின் அதனை நாம் எவ்வாறு முகம கொடுக்கப் போகின்றோம் என்பதை இப்போதே நாம் திட்டமிட வேண்டும். செயல்படவேண்டும் என்று குறிப்பிட்டார்.

இணையத்தலைவர் பொ.விக்னேஸ்வரன் அங்கு உயைாற்றும் போது,

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான உதவித்திட்டங்கள் இன்றுவரையும் முழுமையாகக் கிடைக்கவில்லை இதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தொடர்ந்தும் கஸ்டங்களை எதிர்நோக்கியுள்ளன. இதேவேளை, சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆழிப்பேரலை இடம்பெற்று பத்து மாதங்கள் கடந்துவிட்ட போதிலும்கூட இன்னமும் விபரங்கள் சேகரிக்கின்ற பணிகளிலேயே ஈடுபடுவது வேதனைக்குரியதாகும்.

இந்த நிலையை மாற்றி பாதிக்கப்பட்ட மக்களுக்குரிய உதவிகள் சரியான முறையில் சென்றடைய வேண்டும்மென்பதில் இணையம் தொடர்ந்தும் அக்கறையுடன் செயல்பட்டு வருகின்றது எனக் குறிப்பிட்டார்.

வாழ்வாதாரத்திட்ட அலுவலகத்தின் பெயர்ப்பலகையை இணையத் தலைவர் பொ.விக்கினேஸ்வரன் திரைநீக்கம் செய்து வைத்தார். (த-16)

# தமிழ்-முஸ்லிம் மக்களிடையே கலவரத்தைத் தூண்ட சதி

## -அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர்

அம்பாறை மாவட்டத்தில் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே கலவரத்தை தூண்டுவதற்கு சில அரசியல் சக்திகள் முனைவதாக தமிழீழ விடுதலைப்புலிகள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

கல்முனை பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை முஸ்லிம் தேங்காய் வியாபாரியான சீனிமொகமது வஹாப் என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டார். அவருடன் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த மற்றுமொரு வியாபாரி காயமடைந்தார்.

இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தமிழ்ப் பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளதால் கல்முனை பிரதேசத்தில் பதற்றம் நீடித்தது. இச சம்பவத்துடன் தமிழீழ விடுதலைப புலிகளைத் தொடர்புபடுத்தி சில அரசியல் சக்திகள் கட்டவிழ்த்து விட்டுள்ள செய்திகளை விடுதலைப புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயா மோகன் மறுத்துள்ளார்.

தற்போது தேர்தல் காலம் என்பதால் இந்த அரசியல் சக்திகள் இப்படியான இன வன்முறைகள் மூலம் அரசியல் இலாபம் தேடுவதற்கு முயற்சிக்கின்றனர். இதற்கு தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் ஒருபோதும் இடமளிக்காமல் விழிபபுடன் இருக்க வேண்டும்.

கொல்லப்பட்டவரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தை தெரிவிப்பதோடு இச்சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம். எனவும் அவர் தெரிவித்தார். இதனிடையே துப்பாக்கிச் சூட்டுச்சம் பவதைக் கண்டிக்கும்வகையில் நேற்று முன்தினம் கல்முனை பிரதேசத்தில் முழு அடைப்பு நடைபெற்றதால் வழமைநிலை பாதிக்கப்பட்டது.

# சச்சின் 9


## மீள் பார்வை

என். சொக்கன்

# ஒரு புயலின் கதை

ஆனால், நகரின் கிரிக்கெற் களங்களில் அசுர நர்த்தனம் புரிந்து கொண்டிருந்த அபாரமான அந்தச் சிறுவனை, மும்பை வாழ்மக்கள், 'அந்தப் பேட்டியின் மூலம்தான் அனுக்கமாகத் தெரிந்து கொண்டார்கள். அதன்பிறகுதான் மும்பை கிரிக்கெற் பிரபலங்கள் பலரும் சச்சினை உன்னிப்பாகக் கவனிக்க, அவனைப் பற்றி தீவிரமாகப் பேச, விவாதிக்கத் துவங்கினார்கள். செய்தித் தாள்களில் அடிக்கடி அவனைப் பற்றிய செய்திகளும், 'இந்தப் பையன் பெரிதாக வருவான் பாருங்கள்' என்று ஹேஷ்யம் சொல்கிறவர்களின் பேட்டிகளும் தொடர்ந்து வரலாயின.

1985-86ஆகிய இரண்டு வருடங்களும் சச்சினின் கிரிக்கெற் வாழ்க்கையில் மிக முக்கியமானவை. முதன் முதலாக பள்ளி அணிக்காக விளையாடியது, பின்னர் அதே அணிக்குக் கேப்டனாக ஆனது. ஹாரிஸ் ஷீல்ட், கைல்ஸ் ஷீல்ட், முதல் சதம், மும்பை, மேற்கு மண்டலம் ஆகிய பெரிய அணிகளில் குறிப்பிடத்தக்க இடம்பெற்றது. கணக்கில்லாத சதங்கள். பத்திரிகைகளின் கவனிப்பு, பாராட்டு மழை, மக்களிடையே நல்ல பரிச்சயம் என்று சந்தோஷ சம்பவங்களாகவே தொடர்ந்த வருடங்கள் இவை.



ஆனால் 'இத்தனை சாதனைகளுக்குப் பிறகும் பம்பாய் கிரிக்கெற் அசோஸியேஷன், தனது 'சிறந்த இளம் வீரர்' விருதுக்கு சச்சினைத் தேர்வு செய்யவில்லை. அது அவனுக்குப் பெரிய ஏமாற்றமாக இருந்தது. சச்சினுக்கு மட்டுமில்லை, மும்பை இளம் வீரர்களைத் தொடர்ந்து கவனித்து வரும் எல்லோரும், சச்சினுக்கு அந்த விருது தரப்படாததை ஆச்சரியத்தோடு பார்த்தார்கள், விமர்சித்தார்கள்.

சச்சினின் ஏமாற்றத்தைத் தணிக்க, 1987ஆகஸ்டில் ஒரு கடிதம் வந்தது. எழுதியிருந்தவர் அவனது இலட்சிய பேட்ஸ்மேன்களில் ஒருவரான சுனில் கவாஸ்கர்!

அன்பு சச்சின்,

சமீபகாலமாக உன் விளையாட்டை ஆர்வத்தோடு கவனிக்கிறேன். உன் திறமைக்கும் சாதனைகளுக்கும் பாராட்டுகள் மற்ற எல்லாவற்யையும் விட உன்னிடம் என்னைக் கவர்ந்த விஷயம் உன்னைச் சுற்றியுள்ளவர்கள் சரியாக விளையாடாத போதும் நீ அதைப் பற்றி கவலைகொள்ளாமல் தன்னந்தனியே முயன்று சாதித்த திருக்கிறாய். அந்த உறுதியும் மனத்திட மும் எப்போதும் உன்னுடன் இருக் கட்டும்.



இன்னொரு விஷயம் விளையாட்டுக்காக உன் படிப்பை ஒதுக்கி விடாதே என் அனுபவத்தில் சொல்வதானால் நீ எந்தத் துறையைத் தேர்ந்தெடுத்தாலும் உனது கல்விதான் உன்னைப் பல சிரமமான நிழல்களிலிருந்து காப்பாற்றும்.

கடவுள் உன்னை ஆசீர்வதிப்பாராக...

அன்புடன், சுனில் கவாஸ்கர்

பின் குறிப்பு:-

BCA வின் சிறந்த இளம் ஆட்டக்காரர் விருது உனக்குக் கிடைக்கவில்லையே என்று ஏமாற்றமடையவேண்டாம். சச்சின் இதுவரை அந்த விருதை வாங்கியிருப்பவர்களின் பட்டியலைப் புரட்டிப் பார்த்தாயானால் ஒரு முக்கியமான பெயர் அதில் விடுபட்டிருக்கும். அவர்கள் எனக்கு 'சிறந்த ஜூனியர் கிரிக்கெற்றர்' விருது தரவில்லை என்பதால் நானொன்றும் குறைந்து போய்விடவில்லையே!

எதிர்பாராத நேரத்தில் எதிர்பாராத மனிதரிடமிருந்து வந்த அந்தக் கடிதம் சிறுவன் சச்சினுக்குத் தந்த மன ஆறுதலைச் சொற்களால் விவரிப்பது சாத்தியமில்லை. கடினமாக உழைத்த பிறகு அதற்கான அங்கீகாரத்துக்காக அந்த வயதுக்கே உரிய ஆசையோடு காத்திருந்தவனை பி.ஸி.ஏ. அநியாயமாக ஏமாற்றியது என்றால் புண்பட்டு வருந்தின நெஞ்சுக்கு இப்போது எப்படிப்பட்ட மருந்து கிடைத்திருக்கிறது. அவன் மானசீக வாத்தியாராக நினைத்துப் ஆராதித்த சிறந்த பேட்ஸ்மேனிடமிருந்து கடிதம் ஆயிரமாயிரம் விருதுகள் கூட இந்த ஒரு கடிதத்துக்கும் பாராட்டுக்கும் இணையாகிவிடாது என்று சச்சினுக்குத் தோன்றியிருக்கும்.

1988 பெப்ரவரி 23 ஹாரிஸ் ஷீல்ட் தொடரின் அரையிறுதிப் போட்டி சாரதாஷ்ரம் பள்ளியும் செயின்ட் சேவியர் பள்ளியும் மோதின. ஆஸாத் மைதானத்தில் போட்டி சாரதாஷ்ரம் அணிக்கு சச்சின் கேப்டன். எதிரணிக்கு சாய்ராஜ்பஹூலே.

டாஸில் வென்ற சச்சின் முதலில் பேட் செய்யத் தீர்மானித்தான். அதுல் ரானடேவும் ரூபக் முல்யேவும் ஆட்டத்தைத் துவங்கினார்கள். முப்பது ரன்களுக்குள் முதல் விக்கெற்றை ரூபாக் முல்யே விழ காம்ப்ளியும் ரானடேவும் கொஞ்ச நேரம் ஸ்கோரைத் தூக்கி நிறுத்தினார்கள். 84இல் ரானடே ஆட்டமிழக்க சச்சின் வழக்கமான தனது நான்காவது நிலையில் பேட் செய்ய புகுந்தான். அப்போது காம்ப்ளி 29 ரன்கள் எடுத்திருந்தான்.

(தொடரும்)

# செய்தித் துளிகள்

## இலவசவிநியோகம்

(மருதங்கேணி)

வடமராட்சி கரையோரப் பகுதியில் உள்ள சுனாமியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மண்வெட்டி, மேல்நாட்டு மரக்கறி விதைகள் என்பன விவசாயத் திணைக்களத்தினால் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. புலோலி கமநல சேவை நிலையத்தில் வைத்தே இப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது

சுனாமியால் பாதிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட விவசாயிகள் உடனடியாக வந்து இவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு பருத்தித்துறை விவசாய போதனாசிரியர் வி.பாலசுப்பிரமணியம் கேட்டுள்ளார். (த-35)

## பால்மா அன்பளிப்பு

(சங்கானை)

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினரால் தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த புற்றுநோயாளர்களுக்கு ஒரு தொகுதி பால்மா வகைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை அன்று மாவட்ட வைத்திய அதிகாரி செல்வி எஸ். சிவராணியிடம் மேற்படி பொருட்கள் வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் தலைவர் இராசலிங்கம் ஜே.பி,செகுமாரசிங்கம்ஜே.பீ ஆகியோரால் கையளிக்கப்பட்டது. (து-20)

## நல்லொழுக்க தின நிகழ்வு

(சங்கானை)

சர்வதேச நல்லொழுக்க தினத்தை ஒட்டி வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் கடந்த திங்கட்கிழமை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் சம்மேளனத் தலைவர் சி.இராசலிங்கம் தலைமையில் நல்லொழுக்க தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் மங்கள விளக்கை பாடசாலை அதிபர் திருமதி வே.சண்முகரத்தினம், மானிப்பாய் பிரதேச சபைச் செயலாளர் எம்.சாந்தசீலன், ஸ்ரீலங்கா அ.ச.சம்மேளனத்தின் செயலாளர் விஜயபாலகமகே ஆகியோர் ஏற்றிவைத்தனர். கௌரவவிருந்தினர்களின் உரைகளை அடுத்து நல்லொழுக் கத்தைப் பேணும் 20 மாணவ, மாணவிகளுக்கு வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினால் கல்வி உபகரணங்கள் பரிசாக வழங்கப்பட்டது. (து-20)

## புதிய கட்டட திறப்பு விழா

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா எதிர்வரும் திங்கட்கிழமை பகல் 12 மணிக்கு முதன்மை விருந்தினரான அரசாங்க அதிபர் கே.கணேஷினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும்,க.குகனேசன் மாகாண பிரதம பொறியியலாளர் கட்டங்கள் திணைக்களம்,க.குணசிங்கம் திட்டமிடல் பணிப்பாளர், க. கேதீஸ்வரன் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோரும், கௌரவவிருந்தினர்களாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் பிரதேச செயலர்களும் கலந்துகொள்வர்.

தலைமையுரை, விருந்தினர் உரைகளைத் தொடர்ந்து அரச அதிபரால் பிரதேச மலர் வெளியிட்டு வைக்கப்படும். (து-21)

## திண்மக்கழிவு முகாமைத்துவ கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மட்டத்திலான திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பான கருத்தரங்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி,முல்லைத்தீவு, வவுனியா வடக்கு,மன்னார் மாவட்டங்களில் கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தால் (ரீடோ) நடைமுறைப்படுத்தவுள்ளது. இதன் ஆரம்ப செயற்பாடுகள் யாவும் பூர்த்தியாக்கப்பட்டு எதிர்வரும் 4ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை இந்த கருத்தரங்கு இடம்பெறவுள்ளதாக கிராமிய யாழ். மாவட்டப் பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் அறிவித்துள்ளது. (து)

## தென்னங்கன்று விநியோகம்

(இணுவில்)

தென்னை அபிவிருத்தி சபையின் ஊடாக பொதுமக்களுக்கு மானிய அடிப்படையில் ரூபா 25ற்கு தென்னங்கன்றுகள் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தேவைப்படுவோர் தென்னை அபிவிருத்தி சபையுடன் தொடர்பு கொள்ளுமாறும் உடுவில் பிரதேச செயலர் சி.திருவாகரன் தெரிவித்துள்ளார். (அ-122)

## நூல் நிலையம் திறப்பு விழா

சாயி மந்திரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சிறி சத்திய சாயி நூல் நிலையத்திறப்பு விழா நாளை காலை 10 மணிக்கு வடபிராந்திய சத்திய சாயி சேவா நிலைய இணைப்புத் தலைவர் ஆர். வசந்தசேனனால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இவ்விழாவிற்கான ஆசியுரையை சத்தியசாயி சேவா நிலைய செயற்குழு ஆலோசகர் செ. சிவஞானம் வழங்குவார்.

சிறப்புரையின்னை யாழ். சத்திய சாயி நிலையத் தலைவர் வைத்திய கலாநிதி இ.கணேசமூர்த்தியும் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய அதிபர் ஆ. ஜெகநாதனும் நிகழ்த்துவர்.

திறப்பு விழாவினைத் தொடர்ந்து பகல் 12.30 மணிக்கு மகேஸ்வர பூசை நடைபெறும். (து)

## 2வது லெப். மாலதி நினைவு தின நிகழ்வுகள்

2வது லெப். மாலதியின் 18 ஆம் ஆண்டு நினைவு தின நிகழ் வுகள் எதிர்வரும 10 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9மணிக்கு கோப்பாய் சந்தியில் இருந்து மாலதியின் திருவுருவப்படம் ஊர்வலமாக கோப்பாய் கரவையில் அமைந்துள்ள நினைவுத் தூபிக்கு எடுத்துச்செல்லப்பட்டு சமூக அபிவிருத்தி மன்றத் தலைவி திருமதி நவநீதம் ஜெகதீசன் தலைமையில் நினைவு தின நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

இந்நிகழ்வில்யாழ் மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன்,செ.கஜேந்திரன் ஆகியோர் நினைவுரை நிகழ்த்தவுள்ளனர்.

தமிழீழ பெண்கள் எழுச்சி நாளாகிய இத்தினத்தில் அனைத்து மகளிர் அமைப்புக்களும் தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களும் மற்றும் தாயகத்தை நேசிக்கும் அனைத்து உறவுகளையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் 2வது லெப். மாலதி நினைவுதின ஏற் பாட்டுக்குழு இணைச்செயலாளர் ந. சிவகடாட்சம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்நினைவுதின நிகழ்வுகளை ஒட்டி இன்று சனிக்கிழமை முற்பகல் 9மணிக்கு இரத்ததானம் வழங்கும் நிகழ்வு நீர்வேலி கந்தசாமி கோயிலடியில் உள்ள இந்து இளைஞர் மன்ற கட்டடத்தில் நடைபெறும் எனவும் ஆரோக்கியமான அனைவரும் இந் நிகழ்வல் பங்கேற்று இரத்தம் வழங்கி உதவுமாறும் ஏற்பாட்டுக் குழுவினர் அன்புடன் அழைக்கின்றனர். (அ)

## தங்கச்சங்கிலி அபகரிப்பு

ஆலய வழிபாட்டுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த யுவதி ஒருவரின் தங்கச்சங்கிலி மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் திருடப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி சிவன் ஆலயத்தில் சனீஸ்வர வழிபாடு செய்துவிட்டு வீடு திரும்பிய நுணாவில் மேற்கைச் சேர்ந்த விநாயகமூர்த்தி கவிதா என்பவரது இரண்டரைப் பவுண் தங்கச்சங்கிலியே திருடப்பட்டுள்ளது.

மதியம் 2.00மணியளவில் ஏ-9 வீதியில் மக்கள்நடமாட்டம்குறைவாகக் காணப்பட்டிருந்த வேளை கறுப்பு நிற கண்ணாடியில் உள்ள தலைக் கவசம் அணிந்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே சங்கிலியை அபகரித்துச் சென்றனர்.

யுவதியின் வீட்டுக்கு சற்றுத் தொலைவில் இச்சம்பவம் இடம் பெற்றது. இதுகுறித்து பொலிஸில் முறையிடப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது. (து-21)

# கும்பகர்ணனின் அகச் சிறப்பை விளக்கும் 'கொல் ஈனுங் கொற்றம்'

## திருமறைக் கலாமன்றத்தின் அற்புதத் தயாரிப்பு

மானவீரன் கும்பகர்ணன் பற்றி தமிழ் உலகம் அவ்வளவாக அறிந்ததில்லை கவிச்சக்கரவர்த்தி கம்பனின் அழியாத பாத்திரப் படைப்பில் கும்பகர்ணனே பொற்கிரீடமாவான்! எமது இன்றைய கலை உலகம் இராமனையும், சீதையையும் இராவணனையும், மண்டோதரியையும், இலக்குவனையும், இந்திரஜித்தனையும் அறிந்த அளவிற்கு மான வீரன் கும்பகர்ணனை அறியவில்லை அதோடு ஆற்றுகைகளும் குறிப்பிடத்தக்கவாறு வெளிவரவில்லை.

இதன் பின்னணியில்தான் யாழ். திருமறைக் கலாமன்றத்தினர் நாற்பதாவது ஆண்டின் சிறப்பு நிகழ்வாக 'கொல் ஈனுங் கொற்றம்' என்ற கூத்துருவ நாடகத்தினை பிரமாண்டமான முறையில் தயாரித்து பல இடங்களிலும் ஆற்றுகை செய்து வருகின்றனர்.

இதில் சமகாலத்துடன் ஒன்றிக்கும் கருத்துக்களும் காணப்படுவது சிறப்பம்சமாகும். 'போர் வேண்டாம்' அறமற்ற யுத்தம் பயனற்றது, நீதியற்ற போர் நிலைக்காது உரிமைகள மறுக்கப்பட்டுக் கொண்டே



போனல் சீதை என்ற சமாதானப் பெண்ணை மீட்கும் போர் தவிர்க்கமுடியாதது என்ற சாராம்சத்தை கொண்ட கருத்தியல் ரீதியான பார்வையை இதில் காணமுடிகிறது.

அழகியல் தன்மைகளை நோக்கும் போது யாழ்ப்பாணக் கூத்து வடிவங்களான வடமோடி, தென்மோடி, சிந்துநடை, வசந்தன், ஒயிலாட்டம் உட்பட மன்னார், மட்டக்களப்பு, மலையக கூத்து மரபுகளில் அமைந்த ஆடல் - பாடல்களை ஒருங்கிணைத்து தமிழர்களுக்கு உரித்தான கலைவடிவத்தைக் கணடுபிடிக்கும் தேடல் வரவேற்கத்தக்க ஒன்று தமிழர்களின் தனித் துவமான கலைவடிவம் என்ன? என்று சர்வதேசத்தினர் கேள்விக்கு பதிலளிக்கும்

'கொல் ஈனுங் கொற்றம்' என்ற அற்புதமான படைப்பு திருமறைக் கலாமன்றத்தின் நாற்பதாவது ஆண்டின் மைற்கல்லாக அமைகிறது.

கும்பகர்ணன் வதை படலத்தை அடிப்படையாகக் கொண்டு புதிய வியாக்கியானத்துடன் 'கொல் ஈனுங கொற்றம்' என்ற கூத்துருவ நாடகத்தை அழகியல் மற்றும் விறுவிறுப்புத்தன்மைகளிற்கமைய எழுதி, நெறியாளகை செய்திருநதார் யோ.யோன்சன் ராஜ்குமார். இதில் பல இடங்களில் மரபுகளைத் தழுவியும், புதுமைகளைப் புகுத்தியும் எழுத்துருவாக்கம் அமைந்ததை; நாடகத்தை சுவைக்கின்ற போது விளங்குகிறது.

"பூமியிலே போரதனால் - பலி ஆனவர்கள் ஆயிரமாயிரம்: பலமுடையோர் பலர் திறமுடையயோர் பலர், பயனுடையோர் பலர், அறமுணர்ந்தோர் பலர் அவர் நிலையை ஓதவந்தோம்; கும்பகர்ணன் கதை கூறவந்தோம்'' என்று பிற்பாடடுப்படுவோரும் சபையோராக கட்டியம் கூறியதன் பின் இராவணன் போரிறகுச் செல்வதோடு நாடகம் விறுவிறுப்படைகின்றது.

கும்பகர்ணனை போரிற்கு அனுபபுமாறுஇராவணின் தாத்தா மாலியவான் கூறியதையடுத்து,

நான்கு மல்லர்களை கும்பகர்ணனை எழுப்பிவருமாறு அவனது மாளிகைக்கு மன்னன அனுப்புகின்றான். துயில் கொள்ளும் கும்பகர்ணனை மல்லர்கள் படாத பாடுபட்டுத் தூக்கம் கலைக்கும் காட்சி நகைச்சுவையாகவும், இரசனைத தன்மையுடனும் அமைந்திருந்தது.

"ஆனதோ பெருஞ்சமரும் அழகு
நிறைச் சானகியும்
ஏனோ சிறையதனால் விடுகை



பெறவில்லையண்ணா...''

என்று தொடரும் கொச்சகத்தில கற்பின் செல்வியை விடுவிக்குமாறு கூறுவதில் அவனது அறச்சினம் வெளித்தெரிகின்றது! அவன போர்களம் புகமுன் ''அண்ணா என்னை அவர்கள் வென்றுவிட்டால் உன்னை அவர்கள் வெல்வது எளிதாகிவ்டும என்று எச்சரிப்பதில் அறச சிறப்பு கோடிட்டுக் காட்டப்படுகின்

### திறனாய்வுக் களம்

றது. சாவு அழைத்திட சமர்க்களம் புகுந்துள்ள கும்பகர்ணன் படைகள் (தா தா கிடதோம் தரிகிட தா தா கிட தோம்) என்ற தாளக் கட்டுக்களுடன் வேகமாகவும் கூத்து நடனமாடுவதும் இராமன் படைகள் (தாம தகிட தரிகிட தோம் தக) என்ற மென்மையான பாத்திர வரவுகளும பிற்பாட்டுக்காரர்கள் பாடலோடு சல்லரி - சங்கொலி, ரம்ஸ், மிருதங்கம், தபேலா, ஆர்மோனியவாத்தியங்களின் துணையோடு சண்டைக காட்சிகள் நடிப்புத்திறன்களோடு இணைந்து அமர்களப்படுத்தியது.

"கொல் ஈனுங் கொற்றமே, கோர அரசென்றால் குடிகள் பாவம் என்ன செய்யும்?''

என்ற கேள்விக்கணைகளில் புதிய வியாக்கியானம் வெளிப்படுகின்றது!

நிறைவில் கடைசி உயிர் உள்ள வரை சமராடி மடிகின்றான் கும்பகர்ணன். போர் காட்சியில் வாள், கதாயுதம், கைககவசம், அம்புவில அத்தனையோடும் யுத்தத்திற்கு கையாணட ஆடட முறைகள் சிறப்பாயிருந்தது. இராமனின் அம்புகள் தம்பியை வீழ்த்தியதை அறிந்த இராவணன் மீண்டும் போா வெறி கொண்டு 'என் தம்பியைக் கொன்றவர் சாகிடும் வரையிலும் என் சினம் தீராது. எங்கே என் மகன இந்திரஜித்தன் போர்... போர்...' என்று கத்துகின்றான் இதுவே நாடகத்தின் உச்சம்.

கும்பகர்ணன், இராவணன், இராமன் பாத்திரங்களில் நடித்தவர்கள் தமது பாத்திரச் சிறப்பை வெளிப்படுத்தியுள்ளனர்! ஒரு அசல் சுக்ரீவனை காண முடிந்தது, விபூஷணன், இலட்சுமணன், மாளியவான், மண்டோதரி ஆகிய பாத்திரங்கள் முகபாவங்களை வெளிக்காட்டினர்!

கட்டியக்காரன், பாடல் குழுவினர், படைவீரர் தமது பணியைச் சிறப புற ஆற்றியுள்ளனா. அதோடு பின்னணி இசை அமைப்பும் அற்புதமாக இருந்தது. வேட, உடை, ஒப்பனை மரபுகளைத் தழுவியதாகவும் ஒலி, ஒளி அரங்கவிதானிப்புக

**ஜோ.ஜெஸ்ரின்**
**கொழும்புத்துறை**

கள் நவீன முறையிலும் கையாளப்பட்டுள்ளது. ஓட்டு மொத்தத்தில் கூட்டு முயற்சிக்கு சிறந்த எடுத்துக காட்டு 'கொல் ஈனுங் கொற்றம்' கூத்துருவ நாடகம் அதோடு பிறபாட்டுக காரர்கள் இன்னும் தங்களை வளப்படுத்திக்கொள்ள இடமுண்டு!

ஒரு கலைப் படைப்பானது ஒரு விடயத்தை பல கருத்துக்களோடு தொடர்புபடுத்திக் காட்டும் போது தான் அந்தவிடயம அனைத்து ரசனை மட்டத்தினரையும் சென்றடைவதோடு காலத்தால் நிலைத்தும் நிறகின்றது. இத்தகைய சிறப்புக்கள பலவறறை தன்னகத்தே கொண்டு பாாபபோரை பல கனைகளில் சிந்திப்பதற்கு தூண்டியது 'கொல் ஈனுங் கொற்றம்' என்றால் அது மிகையாகாது. □

# காரைநகரை அபிவிருத்தி செய்வதற்காக பட்டினிக்கெதிரான இயக்கம் நிதி உதவி

காரைநகர் பிரதேசத்தை அபிவிருதத்தி செய்வதற்காக பட்டினிக்கெதிரான நிறுவனம் 15 மில்லியன ரூபா ஒதுக்கியுள்ளதாகத் தெரிவிககப்பட்டுள்ளது.

பட்டினிக்கெதிரான நிறுவன ஆய்வன்போது பல்வேறான அடிப்படைப் பிரச்சினைகள் இனங்காணப்பட்டதாகவும் அதனடிப்படையில் காரைநகரின் நான்கு கிராமசேவையாளர் பிரிவுகளுக்குட்பட்ட 10 கிராமங்கள் தெரிவு செய்யப்படடு அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக பட்டினிக்கெதிரான நிறுவனம் காரைநகர் பிரதேச செயலகத்திற்கு தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் தோப்புக்காடு, ஊரி, பாலாவோடை கிராமங்களும் காரைநகர் தென்மேற்கு கிராம சேவையார் பிரிவில் கருங்காலி, பலகாடு, நீலங்காடு கிராமங்களும் காரை வடககு கிராம சேவையாளர் பிரிவில் இலந்தைச்சாலை, அல்லின் வ்தி, கிராமங்களும் காரை தென் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் இலகடி, சிவன்கோவிலடி கிராமங்களும் அபிவிருத்தி செய்வதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட கிராமங்களின் அபிவிருத்தியுடன் தொழில் சார் வருமானங்கள் அதிகரிப்பதற்கு பல்வேறு பயிற்சி திட்டங்களும் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனடிப்படையில் உள்ளூர் உணவு பாதுகாப்புத் திட்டங்களும நடைமுறைப்படுததப்படவுள்ளன.

இதற்காக ரூபா 15 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதாவும் இதற்கான பயனாளிகளைத் தெரிவு செய்து 10 மாதத்திற்குள் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-246)

# சமுதாயத்தை மேம்படுத்த அனைவரும் உழைக்கவேண்டும்

(புங்குடுதீவு)

பகுத்தறிவு என்னும் மாபெரும் ஆற்றல் மானிடப்பிறவிக்கு இறைவனால் வழங்கப்பட்ட பொக்கிஷம். இவ்வாற்றலை நாம் நல்ல முறையிலே பிரயோகித்து எம் வளத்தையும் சமுதாயததையும் மேம்படுத்த அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேணடும என யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெற்ற நவராத்திரிவிழா ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய வேலணை கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளா சோ.தில்லைநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில, எமது வளத்தையும் சமுதாய மேம்பாட்டையும் மேம்படுத்த உழைக்கும அதே வேளை இவ்வாற்றல பாடசாலைகளிலே ஆசிரியர்களினால் மாணவர்கள் மத்தியில் பிரயோகிக்கப்பட வேண்டும்.

அதற்கு ஆசிரியர்கள் அர்ப்பணிப்பு உணர்வுடனும், விழிப்புணாவுடனும் செயற்பட வேண்டும் நன்மை, தீமை நல்லது, கெட்டது எம் இனத்தின் நற்பண்புகள், நற்செயல்கள் சமய பாரம்பரியங்கள், இறைபக்தி போன்றவற்றை மாணவர்கள் பகுத்தறியக் கூடிய விதத்தில் புகட்ட வேண்டியது ஆசிரியர்களின் கடமையாகும் என்றார்.

இந்நிகழ்வானது கடந்த 4ஆம் திகதி காலை 9.00 மணிக்கு யா.புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்தில் அதிபர் ஆசிரியமணி ந.இராசதுரை தலைமையில் நடைபெற்றது. இதில் ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (த-126)

# பிரதான கட்சிகள் இரண்டும் இணைந்தாலே நிரந்தரத் தீர்வு

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்காக இலங்கையின் முக்கிய அரசியல் கட்சிகள் இரண்டும் இணைய வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்காக முதலில் மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் அண்மையில் கலைஞர்களுடன் நடைபெற்ற விசேட சந்திப்பை அடுத்தே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

மக்களது பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமெனவும 10 வருடங்களுள் அபிவிருத்தியடைந்த நாடாக இலங்கையை மாற்ற வேண்டுமெனவும் அவா சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை ஏற்படுத்த இரண்டு பிரதான கட்சிகளும் ஒன்றாக செயற்படவேண்டுமெனவும் இல்லையென்றால் இந்தப் பிரச்சினையை ஒருபோதும் தீர்க்க முடியாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிடடுள்ளார். (த-9)

## கலை விழா

(பருத்தித்துறை)

தென்புலோலியூர் அமரர்களான பொன்.சின்னத்துரை, எஸ்.அம்பலவாணா, திருமதி சிவயோகம் ஆகியோர் ஞாபகார்த்தமாக புலோலி கல்வி நிலையத்தில் நாளை கலை விழாவும், பரிசளிப்பு விழாவும் நடைபெறவுள்ளன.

'புலோலி கல்வி நிலைய இயக்குநர் எஸ்.சிவலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர். வரதீஸ்வரன் பிரதமாவிருந்தனராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ற-52)

## சமூகக்கல்வி போட்டி

(புங்குடுதீவு)

தீவக வலயப் பாடசாலைகளுக்கிடையேயான வலய, கோட்ட மட்ட சமூகக்கல்வி போட்டி இன்று சனிக்கிழமை மு.ப.10.00 மணிக்கு பின்வரும் பாடசாலைகளில் இடம்பெறவுள்ளன.

வேலணை கோட்டம்:-யா/வேலணை துரைச்சாமி மத்திய மகா வித்தியாலம்.

நெடுந்தீவு கோட்டம் :-யா/நெடுந்தீவு மகா வித்தியாலம்.

ஊர்காவற்றுறை:- கோட்டம் யா/ புனித அந்தோனியார் கல்லூரி. (ற-126)

## செயற்திட்டப் பயிலரங்கு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு மனிதநேய அமைப்புக்களின கூட்டமைப்பின் அனுசரணையுடன் வட இலங்கை சர்வோதயம நடாத்தும் சமாதானமும் அபிவிருத்திக்குமான செயற்திட்ட பயிலரங்கு இன்று காலை 9.30 மணிக்கு புங்குடுதீவு வடஇலங்கை சர்வோதய சபை வளாக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (து-9)

## தேர்தல் விஞ்ஞாபனம்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின், புதிய இடதுசாரி முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீடு இன்று காலை 10மணிக்கு கொம்பனித் தெரு இல:143/4, அண்ணாமலை கூடத்தில் இடம்பெறும்.

இந்த வைபவத்தில் புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண ஜனாதிபதி வேட்பாளர் சமில் ஜயநெததி ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளார்கள்.

இவ் வைபவத்தில் புதிய இடதுசாரி முன்னணியின் அனைத்து மாவட்ட அமைப்பாளர்களும் கலந்துகொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## நல்லாசிரியர் விருது

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆரம்பக் கல்வி ஆசிரியர்களான திருமதி தயாபரி சூரியகுமாரன், கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம், திருமதி.ம.செல்வரத்தினம் நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம், திருமதி சரோஜினி நவரத்தினராசா, கொடிகாமம் அரசினர் த.க.வித்தியாலம் ஆகியமூவரும் நல்லாசிரியகர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (து-108)

## சேவை நலன் பாராட்டு

இலங்கை போக்குவரத்து சபையில் கடந்த 37 வருடங்களாக கடமையாற்றிய க.பாலசிங்கம் கடந்த 5 ஆம் திகதி ஓய்வு பெற்றுள்ளார்.

1968இல் இலங்கை போக்குவரத்துச சபையில் இணைந்து பல பதவி உயர்வுகளைப் பெற்று செயலாற்று முகாமையாளராகக் கடந்த 4 வருடஙகள் பணியாற்றிய இவரை பாராட்டும பிரிவுபசார வைபவம் கடந்த 4ஆம் திகதி பொது முகாமையாளர் கே.கசேண பிள்ளை தலைமையில் கோண்டாவில் டிப்போவில் நடைபெற்றுள்ளது. (அ-36)

## விவசாயக் கடன்

சுன்னாகம் ஹற்றன் நஷனல் வங்கி உடுவில் கமநல சேவைகள் நிலையத்திற்குட்பட்ட விவசாயிகளுக்கு விவசாயக் கடன் வழங்க முன்வந்துள்ளது.

இதன் ஒரு கட்டமாக இம் முறை சுமார் 30க்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு கடன்வழங்க இணுவில் கிழக்கு விவசாய சம்மேளனத் தலைவர் சி.திருக்குமார் சிபாரிசு செய்துள்ளார். இக் கடன்தொகையாக 25 [illegible] முதல் 1இலட்சத்து 50 [illegible] வழங்கப்படவுள்ளது. [illegible]

## கோப்பாய் கல்விக் கோட்ட

# சிறுவர் முதியோர் தின போட்டி முடிவுகள்

(கோப்பாய்)

ச்வதேச சிறுவர் முதியோர் தினத்தையொட்டி கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களிடையே அண்மையில் நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

**சிறுவர் தினம் – கட்டுரை**

**ஆரம்ப பிரிவு**

1ஆம் இடம் -சி.டியூறன்,கோபபாய் தெற்கு றோ.க.த.பாட.

2ஆம் இடம் - க.சுபேகா, ஆவரங்கால நடராஜஇராமலிஙக வித்தி.

3ஆம் இடம் - லோ.தர்சிகா, கரந்தன இராமுப்பிள்ளை வித்தி.

**கனிஷ்ட இடைநிலை**

1ஆம் இடம -அ.அருள்பிரியா, அச்சுவேலி புனித திரேசாள மகளிர் கல்லூரி.

2ஆம் இடம் - ஞா.கஜனி, அச்சுவேலி மத்திய கல்லூரி.

3ஆம் இடம் - ம.கபிறினி, கோப்பாய நாவலர் வித்தி.

3ஆம் இடம் - கெ.ஆன்நிஷாறா,புனித திரேசாள் மகளிர் கல்லூரி.

**சிரேஷ்ட இடைநிலை**

1ஆம் இடம் - ப.ஜீவிகா, ஆவரங்கால மகாஜன வித்தி.

2ஆம் இடம் - நா.சுஜிதரன், கோப்பாய சரவணபவானந்தா வித்தி.

3ஆம் இடம் - சி.ஜனனி, அச்சுவேலி சரஸ்வதி வித்தி.

**உயர் பிரிவு**

1ஆம் இடம் - தி.மேனகா, அச்சுவேலி மத்திய கல்லூரி.

2ஆம் இடம்- பொ.ஸ்ரீவர்ணன், சோமஸ்கந்தா கல்லூரி.

3ஆம் இடம் - சி.கல்பனா, அச்சுவேலி மத்திய கல்லூரி.

3ஆம் இடம் - இ.நிஷா, புனித திரேசாள் மகளிர் கல்லூரி.

**கவிதை**

**ஆரம்ப பிரிவு**

1ஆம் இடம் - ந.யசோதா, அத்தியார் இந்துக் கல்லூரி.

2ஆம் இடம் - ச.கோகிலா, புனித திரேசாள் மகளிர் கல்லூரி.

3ஆம் இடம் - பா.கீதாஞ்சலி, கரந்தன இராமுப்பிள்ளை வித்தி.

**கனிஷ்ட இடைநிலைப் பிரிவு**

1ஆம் இடம் - அ .மயூரி, பத்தைமேனி இரட்னேஸ்வரி வித்தி.

2ஆம் இடம் - இ.றஜிதா, வாதரவத்தை விக்னேஸ்வர வித்தி.

3ஆம் இடம் - சி.ஜசீபா, வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தி.

**சிரேஷ்ட பிரிவு**

1ஆம் இடம் - சி.விமலேந்தி, பத்தைமேனி இரட்னேஸ்வரி வித்தி.

2ஆம் இடம் - வி.பிரசாயினி, ஆவரங்கால் மகாஜன வித்தி.

3ஆம் இடம் - தே.அனுட்டா, பத்தைமேனி இரட்னேஸ்வரி வித்தி.

3ஆம் இடம் - ஸ்ரீமிதா, சோமஸ்கந்தா கல்லூரி.

**உயர் பிரிவு**

1ஆம் இடம் - வி.துஷ்யந்தி, அத்தியாா இந்துக் கல்லூரி.

2ஆம் இடம் - யோ.தீபா, புனித திரேசாள் மகளிர் கல்லூரி.

3ஆம் இடம் -அ.பிரியகாந்தி, புனித திரேசாள் மகளிர் கல்லூரி.

3ஆம் இடம் - ச.சோபிகா, அத்தியார் இந்துக் கல்லூரி.

**முதியோர் தினம் – கட்டுரை**

**ஆரம்ப பிரிவு**

1ஆம் இடம் - க.பைரவி, சிறுப்பிட்டி இ.த.க.பாட.

2ஆம் இடம் - சி.ஆரணி, ஆவரங்கால நடராஜ இராமலிங்க வித்தி.

3ஆம் இடம் - கு.மயூரதி, சோமஸ்கந்தா கல்லூரி.

**கனிஷ்ட இடைநிலைப் பிரிவு**

1ஆம் இடம் - கு.கீர்த்திகா, அச்சுவேலி சரஸ்வதி வித்தி.

2ஆம் இடம் - ஜெ.இராஜசிருங்காரி, ஊரெழு கணேச வித்தி.

3ஆம் இடம - ஷெரின் கலிஸ்ரா, புனித திரேசாள் மகளிர் கல்லூரி.

**கட்டுரை**

**சிரேஷ்ட பிரிவு**

1ஆம் இடம் - வி.ஜாளினி, அச்சுவேலி சரஸ்வதி வித்தி.

2ஆம் இடம் - அ.ஆர்த்திகா, ஆவரங கால் நடராஜ இராமலிங்க வித்தி.

3ஆம் இடம் - ப.துளசி, உரும்பிராய் சைவத்தமிழ்வித்தி.

**உயர் பிரிவு**

1ஆம் இடம் - கு.சுவர்ணவிழி, அச்சுவேலி மத்திய கல்லூரி.

2ஆம் இடம் - அ.மயூரா, சோமஸ்கந்தா கல்லூரி.

3ஆம் இடம் - க.கலையரசி, புனித திரேசாள் மகளிர் கல்லூரி.

**கவிதை**

**ஆரம்ப பிரிவு**

1ஆம் இடம் - அ.மதிராஜ், பத்தைமேனி இரட்னேஸ்வரி வித்தி.

2ஆம் இடம் - து.ஜென்சிகா, கோபபாய் தெற்கு றோ.க.த.க.பாட.

3ஆம் இடம் - ச.கம்சிகா, ஆவரங்கால நடராஜ இராமலிங்க வித்தி.

3ஆம் இடம் - மா.கஜானன் , சோமஸ்கந்தா கல்லூரி.

**கனிஷ்ட இடைநிலைப் பிரிவு**

1ஆம் இடம் - சி.தரணிகா, ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.

2ஆம் இடம் - ஜெ.டென்சி, கோப்பாய் மகா வித்தி.

3ஆம் இடம் - அ.சிந்து, பத்தைமேனி இரட்னேஸ்வரி வித்தி.

**சிரேஷ்ட பிரிவு**

1ஆம் இடம் - யோ.தீபா, நீர்வேலி றோ.க.த.க.பாட.

2ஆம் இடம் - அ.துஸ்ஜந்தி, உருமபிராய் சைவத்தமிழ் வித்தி.

3ஆம் இடம் - ப.கயல்விழி, நீர்வேலி றோ.க.த.க.பாட.

**உயர் பிரிவு**

1ஆம் இடம் - த.பிறின்சிகா, அச்சுவேலி மத்திய கல்லூரி.

2ஆம் இடம் - கு.நிஷாளினி, அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி.

3ஆம் இடம் - து.தசோனியா, அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி. (ற-79)

## நவராத்திரிப் பாமாலை



### இன்று ஐந்தாம் நாள்

### தேவி வணக்கம்

காராளும் எங்கள் கல்யாண சுந்தரியை – கல்வியின்
பாராளும் எங்கள் பரம்பொருளின் பவானியை
– விண்ணதிர
வானாமரம் எங்கள் வல்லபைகள் மூவரையும் – நாம்
சீரோடு சிரந்தாழ்த்தி சிறப்புடனே வணங்கிடுவோம்.

மு.சுகந்தினி,அச்சுவேலி தெற்கு.

### திருமகளே! அருளை வழங்கு

மல்லாண்ட திண்தோள் மணிவண்ணன் மார்பகத்துப்
புல்லாண்ட செம்பதுமைப் பொன்பாவாய் – வில்லாண்ட
நல்நுதலீ! ஞாலம் நயக்கும் நளினமலர்த்
துன்னு தலைவீ! துணை

திருமகளே! தேன் ஒழுகு செந்தா மரைமேல்
வருமகளே! ஆனந்தவல்லீ! – ஒரு பொழுதும்
உன்னை நினையார் உளரேமா? நினைக்கின்ற
என்னையும் காப்பாய் இனிது

ரெ.இராமமூர்த்தி.

# விரிவுபடுத்தப்படவுள்ள தே.அ.அட்டை விநியோகம்

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டைகளை இதுவரை பெறாதோருக்கு அவற்றை விநியோகிக்கும் நடைமுறை விரிவுபடுத்தப்படவுள்ளது.

தேர்தலில் வாக்களிப்பதற்கு அடையாள அட்டைகளைப் பயன்படுத்தும திட்டதின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அடையாள அட்டை விநியோக நடவடிக்கைகளை மாவட்ட மட்டத்தில் கண்காணிப்பதற்காக ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளவிருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் நிமால் சிறிபாலடி சில்வா தெரிவித்தார்.

தேசிய அடையாள அட்டை கோரி விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை திருப்தியான மட்டத்தில் இல்லையென்பதை அரசாங்கம் அறிந்துள்ளது.

குறிப்பாக தோட்டப் பகுதிகள மற்றும் வடக்குக் - கிழக்குப் பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் மத்தியில இது தொடர்பாக விழிப்புணர்வை ஏறபடுத்தவேண்டியிருப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (த-9)

# களனி பல்கலை மாணவர்களில் 70 வீதமானோர் மஹிந்தவுக்கு ஆதரவு

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களில் 70 வ்தமானோர் ஸ்ரீலங்கா சுதந்திரக கட்சி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பதாக கருத்துக்கணிப்புத் தகவல் ஒன்று தெரிவித்துள்ளது.

களனி பல்கலைக்கழகத்தின் ஆய்வு மையமானது 1,713 முதுகலைப்பட்டதாரிகளிடம் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக கருத்துக் கணிப்பு நடாத்தியது.

அவர்களில 70 வ்தத்தினர் மஹிந்த ராஜபக்ஷவையும், 19.1 வீதத்தினர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்ததாகவும் அவ் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வாழ்க்கைச் செலவீனங்களைக் குறைக்கக்கூடியவர் யார்? என்ற கேள்விக்கு 37.5 வீதமானோர் மஹிந்த எனவும் 15.5 வீதமானோர் ரணில் எனவும் வாக்களித்திருந்தனர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பவர் யார்? என்ற கேள்விக்கு மஹிந்தவை 28 வீதமானோரும் ரணிலை 17 வீதமானோரும் ஆதரித்துள்ளனர். ஆனால் 55 வீதமானோா எவரையும் ஆதிரிதது வாக்களிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ற-4)

# 10 ஆயிரம் பேருக்கு இவ்வாண்டு மகாபொல புலமைப்பரிசில்

(கொழும்பு)

2004ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கு மகாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவுகளை வழங்க அனைத்து ஏற்பாடுகளும மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கான ஆவணங்கள் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக மாகாபொல புலமைப்பரிசில் நிதியம் தெரிவித்துள்ளளது.

அவற்றை விரையில் பூர்ததி செய்து திருப்பி அனுப்பிவைக்குமாறு நிதியத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டு 10ஆயிரம பேருக்கு புலமைப்பரிசில் கொடுப்பனவுகளை வழங்கத் திட்டமிடப்படடுள்ளது. இவர்களில் 9 ஆயிரம் பேர் பல்கலைக்கழக மாணவர்கள். ஏனையோர் தொழில்நுட்பக் கல்லூரிகள் உள்ளிட்ட உயர்கல்வி நிலையங்களைச் சேர்ந்தோர்.

ஒவ்வொரு மாணவர்களுக்கும் மாதாந்தம் 2ஆயிரம் ரூபா வழங்கப்படும். மகாபொல புலமைப்பரிசில் வழங்குவதற்காக அரசாங்கம் ஒவ்வொரு வருடமும் 60 கோடி ரூபாவைச் செலவழிக்கின்றது. இதில் சுமார் 30 ஆயிரம் மாணவர் கள் புலமைப் பரிசில் கொடுப்பனவுகளைப் பெறுகின்றனர். (த-9)

# நோயாளர் விடுதி திறப்பு விழா

(காரைநகர்)

காரைநகர் கிராமிய வைத்தியசாலையில் புதிதாக நிறுவப்பட்ட நோயாளர் விடுதிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 11.30 மணிகது திறந்துவைக்கப்படவுள்ளது.

காரை நலனபுரிசசங்க தலைவர் எஸ்.தில்லையம்பலவாணர் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், நோயாளர் விடுதியினை, கலாநிதி க.வைத்தீஸ்வரக் குருக்கள், சமாதான நீதவான் க.சோமசேகரம் ஆகியோர் திறந்துவைக்கவுள்ளனர்.

மேற்படி இரு விடுதிகளும அமரர் இராசநாயகம் ஞாபகார்த்தமாக அமரரின் குடும்பத்தினரதும் மற்றும் லண்டன் காரை. அபிவிருத்திச் சபையினரதும் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-246)

# யாழ்.பல்கலைக்கழக 24 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா - 2005

யாழ்.பல்கலைக்கழகத்தின் 24ஆவது பட்டமளிப்பு விழா கடந்த இரு தினங்கள் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

யாழ்.பல்கலைக்கழக அணைவேந்தா பேராசிரியர் சு.மோகனதாஸ் தலைமையில் தினமும் ஐந்து அமாவுகளாக நடைபெற்றன.

இப் பட்டமளப்பு விழாவில் 2ஆயிரத்து 375 பேருக்கு பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளது. கலைமாணிப்பட்டம 700 மாணவர்களும், மருத்துவ கலாநிதி மாணிப்பட்டம் 139 மாணவாகளும், சித்தமருத்துவ மாணிபபட்டம் 27 மாணவர்களும் நுண்கலைமாணிப்பட்டம் 175 மாணவர்களும, விவசாய மாணிப்பட்டம் 49 மாணவர்கள், விஞ்ஞான மாணிப்பட்டம 170 மாணவர்களும், வணிக மாணிப்பட்டம 139 மாணவர்களும், முகாமைத்துவப் பட்டம் 198 மாணவர்களும், வவுனியா வளாத்தில் இருந்து விஞ்ஞானமாணி, வர்த்தக, முகாமைத்துவமாணிப் பட்டத்தை 126 மாணவர்களும், முதுகலைமாணி, முதுகல்விமாணிப் பட்டத்தை 321 பேரும், டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்திசெய்த 65பேரும் வெளிவாரி மாணவர்கள் 258 பேரும் பட்டம் பெறறுள்ளமை குறிப்பிடத்தககது.

இம்முறை பட்டமளிப்பு விழாவில் ஆறு பேருக்கு கௌரவ கலாநிதி பட்டமும் 3 பேருக்கு கலாநிதிப் பட்டமும் வழங்கப்படடுள்ளமை குறிபபிடத்தக்கது.

சைவப் புலவர் வல்லிபுரம் கந்தசாமி, முல்லைமணி வேலுப்பிளளை சுப்பிரமணியம், அமரர் கணபதிப்பிள்ளை சிவராமலிங்கம் பிள்ளை, வைத்தியகலாநிதி செல்வி நவமலர் கனரத்தினம், சவரிமுத்து அடைக்கலமுத்து ஆகியோருக்குக் கௌரவ தததுவக் கலாநிதிப் பட்டமும் பேராசிரியர் வேலுப்பிள்ளை தர்மரட்ணத்திறகு கௌரவ விஞ்ஞான கலாநிதிப் பட்டமும வழங்கப்பட்டுளளது. அத்துடன் இந்துநாகரிகத் துறையில் திருமதி கலைவாணி இராமநாதன், கிறிஸ்தவ நாகரிகத் துறையில் அருட்தந்தை கலாநிதி ஞானமுத்து புலேந்திரன், சித்தமருத்துவத் துறையில் வைத்திய கலாநிதி பொன்னம்பலம் இராமநாதன் ஆகியோருக்கு கலாநிதிப்பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

இப் பட்டங்கள் யாவற்றையும் யாழ. பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் எம்.சிவசூரியா வழங்கிக் கௌரவித்தாா. (அ-19)

# சட்டவிரோத மின்பாவனையாளர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## - பரு.மின் அத்தியட்சகர்

(பருத்தித்துறை)

இலங்கை மின்சாரசபை வடமராட்சிப் பிரதேசத்தில் சட்டவிரோத மின்பாவனையிலீடுபடுபவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகப் பருத்தித்துறை மின் அத்தியட்சகர், எஸ்.இராமலிங்கமூர்த்தி அறிவித்துள்ளார்.

வடமராட்சிப் பகுதி மின்பாவனையாளர்களின் முறைப்பாடுகளையடுத்தே இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படடுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத மின்பாவனையாளர்களை கண்டுபிடிக்கும் திடீர சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திடீர்ச் சோதனைகளின் போது சிக் கிக்கொள்ளும் சட்டவிரோத மின்பாவனையாளர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படுவார்கள் என்றும அவர்களது சட்டவிரோத மின்பாவனைப் பொருட்கள் பறிமுதல செய்யப்படுவதோடு அவர்களுக்குக் கடுந்தண்டனை விதிக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பிரதேசத்தில் மின்விநியோகப் பண நிலுவை 1500 ரூபாவுக்கு மேல் இருக்குமாயின் அவர்களின் மின்னிணைப்பு எந்த நேரமும் துண்டிக்கப்படலாம்.

மற்றும் 1500 ரூபாவிற்கு மேல் நிலுவை உள்ள மின்சார பாவனையாளர்களுக்கு மின்விநியோகத்தில் ஏற்படும் பிரச்சினைகள் பற்றிப் புகார் செய்தாலும் மின்சாரசபை நடவடிக்கைகளை மேற்கொள்ளாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-52)

# சுகமாக வாழ சூழல் பாதுகாப்பு

② (தொடர்ச்சி...)

### நீர்ப்பாசனத் திணைக்களங்கள்

*திணைக்களத்தின் உட்புறச் சூழலையும் எல்லைப்புற சூழலையும் சுத்தம் செய்தல்.

*தமக்குச் சொந்தமான கால்வாய்களை அண்டியுள்ளபற்றைகளைவெட்டிச் சுத்தம்செய்வதுடன் இந்நடைமுறையினை தொடர்ச்சியாகப் பேணி வருதல்.

*நீர்ப்பாசனக் குளங்களில் கழிவுகள் கொட்டப்படுவதனை தடுப்பதுடன் குளம் மற்றும் குளக்கரையோரமாகத் தேங்கியுள்ள கழிவுகளை அகற்றுதல்.

*கழிவகற்றல் பணியினை மேற்கொள்ளும் போது அகற்றப்படும் கழிவுகளை வகைப்படுத்தி இறுதியகற்றலுக்கு ஒத்துழைத்தல்.

*உக்கிப்போகாத திண்மக்கழிவுகளை ஓரிடத்தில் சேகரித்து இறுதி அகற்றலுக்கு உதவுதல்.

*பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகளை அதற்குரிய பைகளில் சேகரித்தல்.

*உக்கிப்போகக்கூடிய விலங்கு மற்றும் ஏனைய திண்மக் கழிவுகளை உரமாகக்கூடிய வகையிலான செயற்பாடுகளை மேற்கொள்ளல் அல்லது இறுதியகற்றலுக்காக ஓரிடத்தில் சேகரித்தல்.

### கமநலசேவை விவசாயத் திணைக்களங்கள்

*திணைக்களங்கள் தமது பிரதேச எல்லைப் புறங்களை துப்பரவு செய்தல்.

*கழிவகற்றல் பணியினை மேற்கொள்ளும் போது அகற்றப்படும் கழிவுகளை வகைப்படுத்தி இறுதியகற்றலுக்கு ஒத்துழைத்தல்.

*கழிவுநீரைத் தேக்கிக்கொள்ளக்கூடிய வகையில் திணைக்களச் சூழலில் காணப்படும் பொருட்களை அகற்றுவதுடன் அவ்வாறான இடங்களையும் நீர் தேங்காதவாறு மூடிவிடுதல்.

*உக்கிப்போகாத திண்மக்கழிவுகளை ஓரிடத்தில் சேகரீத்து இறுதி அகற்றலுக்கு உதவுதல்.

*பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகளை அதற்குரிய பைகளில் சேகரித்தல். உக்கிப்போகக்கூடிய விலங்கு மற்றும் ஏனைய திண்மக்கழிவுகளை உரமாகக்கூடிய வகையிலான செயற்பாடுகளை மேற்கொள்ளல் அல்லது இறுதியகற்றலுக்காக ஓரிடத்தில் சேகரித்தல்.

*திணைக்களச்சூழலில் பொருத்தமான இடங்களில் மரங்களை நட்டுப் பராமரித்தல்.

### வணக்கத் தலங்கள்

*ஆலயங்களின் உட்புறச் சூழலையும் எல்லைப்புற சூழலையும் சுத்தம் செய்தல்.

*ஆலயத்தின் கழிவுகளை சேகரிக்கக்கூடிய வகையில் சேகரிப்பு பைகளை வகைப்படுத்தி வைத்தல்.

*ஆலயத்தின் நடைமுறை தொடர்பாக ஆலயத்திற்கு வருபவர்களிடம் அறிவுறுத்தல்.

*தெரிவு செய்யப்படும் ஒரு பிரதேசத்தில், இடத்தில்சிரமதானப் பணியினை மேற்கொள்ளல்.

*கழிவகற்றல் பணியினை மேற்கொள்ளும் போது அகற்றப்படும் கழிவுகளை வகைப்படுத்தி இறதியகற்றலுக்கு ஒத்துழைத்தல்.

*கழிவுநீரைத் தேக்கிக்கொள்ளக்கூடிய வகையில் ஆலயச்சூழலில் காணப்படும் பொருட்களை அகற்றுவதுடன் அவ்வாறான இடங்களையும் நீர் தேங்காதவாறு மூடிவிடுதல்.

*உக்கிப்போகாத திண்மக்கழிவுகளை ஓரிடத்தில் சேகரித்து இறுதி அகற்றலுக்கு உதவு தல்.

*பிளாஸ்ரிக், பொலத்தீன் கழிவுகளை அதற்குரிய பைகளில் சேகரித்தல்

*உக்கிப்போகக்கூடிய விலங்கு மற்றும் ஏனைய திண்மக்கழிவுகளை உரமாகக்கூடிய வகையிலான செயற்பாடுகளை மேற்கொள்ளல் அல்லது இறுதியகற்றலுக்காக ஓரிடத்தில் சேகரித்தல்.

*நிரந்தர கழிவு சேகரிப்பான்களை அயலில் உள்ள வெளிப்பகுதிகளில் வைத்தல்.

### விடுதலைப்புலிகளின் அமைப்புக்கள்

*அனைத்து அமைப்புக்களும் தமது வளாகத்தின் உட்புறச் சூழலையும் எல்லைப்புற சூழலையும் சுத்தம் செய்தல்.

*முகாம் அமைந்துள்ள பிரதேசம் பாதைகளை துப்பரவு செய்தல்.

*கழிவகற்றல் பணியினை மேற்கொள்ளும் போது அகற்றப்படும் கழிவுகளை வகைப்படுத்தி இறுதியகற்றலுக்கு ஒத்துழைத்தல்.

*கழிவகற்றும் இடங்களில் கழிவுநீரைத் தேக்கிக்கொள்ளக்கூடிய வகையில் காணப்படும் பொருட்களை அகற்றுவதுடன் அவ்வா றான இடங்களையும் நீர் தேங்காதவாறு மூடிவிடுதல்.

*உக்கிப்போகாத திண்மக்கழிவுகளை ஓரிடத்தில்சேகரித்து இறுதி அகற்றலுக்கு உதவுதல்.

*பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகளை அதற்குரிய பைகளில் சேகரித்தல்.

*கழிவுகளைச் சேகரிக்கக்கூடிய வகையில் ஒவ்வொரு இடத்திலும் கழிவு சேகரிப்பான்களை வகைப்படுத்தி வைத்தல்.

*உக்கிப்போகக்கூடிய விலங்கு மற்றும் ஏனைய திண்மக்கழிவுகளை உரமாகக்கூடிய வகையிலான செயற்பாடுகளை மேற்கொள்ளல். அல்லது இறுதியகற்றலுக்காக ஓரிடத்தில் சேகரித்தல்.

*பொருத்தமான இடங்களில் மரக்கன்றுகளை நாட்டிப் பராமரிப்பதன் மூலம் தாயகத்தின் பசுமைச்சூழலைப் பேணுதல்.

### விளையாட்டுக் கழகங்கள்

*தமக்குரிய விளையாட்டு மைதானங்களைச் சுத்தமாக வைத்திருத்தல்.

*தெரிவு செய்யப்பட்ட ஒரு இடத்தில் சிரமதானப் பணியினை மேற்கொள்ளல்.

*கழிவகற்றல் பணியினை மேற்கொள்ளும் போது அகற்றப்படும் கழிவுகளை வகைப்படுத்தி இறுதியகற்றலுக்கு ஒத்துழைத்தல்.

*அங்கத்தவர்களின் செயற்பாடுகளை ஒன்றிணைத்து நெறிப்படுத்தல்.

*கழிவகற்றும் இடங்களில் கழிவுநீரைத் தேக்கிக்கொள்ளக்கூடிய வகையில் காணப்படும் பொருட்களை அகற்றுவதுடன் அவ்வாறான இடங்களையும் நீர் தேங்காதவாறு மூடிவிடுதல்.

*உக்கிப்போகாத திண்மக்கழிவுகளை ஓரிடத்தில் சேகரித்து இறுதி அகற்றலுக்கு உதவுதல்.

*கழிவகற்றும்போது பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகளை அதற்குரிய பைகளில் சேகரித்தல்.

*உக்கிப்போகக்கூடிய விலங்கு மற்றும் ஏனைய திண்மக் கழிவுகளை உரமாகக்கூடிய வகையில் புதைத்தல் அல்லது இறுதியகற்றலுக்காக ஓரிடத்தில் சேகரித்தல்.

*மைதானங்களில் கழிவு சேகரிப்பான்களை வைத்தல்.

*விளையாட்டு போட்டிகள் முடிந்த பின் கழிவுகளை சேகரித்து அப்புறப்படுத்தல்.

### கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசங்கள்

*தமக்குரிய பிரதேசத்தில் சுத்தம் செய்வதற்காக உரியவர்களுடன் ஒன்றிணைந்து செயற்படல்.

*தெரிவு செய்யப்பட்ட ஒரு இடத்தில் சிரமதானப் பணியினை மேற்கொள்ளல்.

*கழிவகற்றல் பணியினை மேற்கொள்ளும் போது அகற்றப்படும் கழிவுகளை வகைப்படுத்தி இறுதியகற்றலுக்கு ஒத்துழைத்தல்.

*அங்கத்தவர்களின் செயற்பாடுகளை ஒன்றிணைத்து நெறிப்படுத்தல்.

*கழிவகற்றும் இடங்களில் கழிவுநீரைத் தேக்கிக்கொள்ளக்கூடிய வகையில் காணப்படும் பொருட்களை அகற்றுவதுடன் அவ்வாறான இடங்களையும் நீர் தேங்காதவாறு மூடிவிடுதல்.

*கடற்றொழிலாளர் சங்கங்களைப் பயன்படுத்தி கடற்கரையோரத்தைச் சுத்தமாக வைத்திருத்தல் அதற்குரியவாறு சங்கங்களிற்கு இடங்களைப் பிரித்துக் கொடுத்தல்.

*உக்கிப்போகாத திண்மக்கழிவுகளை ஓரிடத்தில்சேகரித்து இறுதி அகற்றலுக்கு உதவுதல்.

*கழிவகற்றும்போது பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகளை அதற்குரிய பைகளில் சேகரித்தல்.

*உக்கிப்போகக்கூடிய விலங்குமற்றும் ஏனைய திண்மக்கழிவுகளை உரமாகக்கூடிய வகையில் புதைத்தல் அல்லது இறுதியகற்றலுக்காக ஓரிடத்தில் சேகரித்தல்.

*கழிவு சேகரிப்பான்களை கரையோரங்களில் வைத்தல்.

### இடைத்தங்கல் முகாம்கள்

*தனிநபர் சுகாதாரம் பேணல்.

*உட்புறச் சூழலையும் எல்லைப்புறச் சூழலையும்சுத்தம் செய்தல்.

*கழிவகற்றல் பணியினை மேற்கொள்ளும் போது அகற்றப்படும் கழிவுகளை வகைப்படுத்தி இறதியகற்றலுக்கு ஒத்துழைத்தல்.

*ஒவ்வொரு முகாம் பிரிவுகளிலும் கழிவுகளைச் சேகரிக்கக்கூடிய வகையில் பைகளை வகைப்படுத்தி வைத்தல்.

*கழிவுநீரைத் தேக்கிக்கொள்ளக்கூடிய வகையில் காணப்படும் பொருட்களை அகற்றுவதுடன் அவ்வாறான இடங்களையும் நீர் தேங்காதவாறு மூடிவிடுதல்.

*உக்கிப்போகாத திண்மக்கழிவுகளை ஓரிடத்தில் சேகரித்து இறுதி அகற்றலுக்கு உதவுதல்.

*பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகளை அதற்குரிய பைகளில் சேகரித்தல்.

*உக்கிப்போகக்கூடிய விலங்கு மற்றும் ஏனைய திண்மக்கழிவுகளை உரமாகக்கூடிய வகையிலான செயற்பாடுகளை மேற்கொள்ளல். அல்லது இறுதியகற்றலுக்காக ஓரிடத்தில் சேகரித்தல்.

*பொருத்தமான இடங்களில் மரக்கன்றுகளை நாட்டிப் பராமரிப்பதன் மூலம் தாயகத்தின் பசுமைச் சூழலைப் பேணுதல்.

*முகாம்களில் கழிவு சேகரிப்பான்களை வைத்தல்.

### கைத்தொழில் கூடங்கள்

*ஒவ்வொரு நிலையமும் தமது உட்புறச் சூழலையும் எல்லைப்புறச் சூழலையும் சுத்தம் செய்தல்.

*நிலையத்தின் கழிவுகளை சேகரிக்கக்கூடிய வகையில் சேகரிப்பு பைகள் கழிவுசேகரிப்பான்களை வகைப்படுத்தி வைத்தல்.

*கழிவகற்றல் பணியினை மேற்கொள்ளும் போது அகற்றப்படும் கழிவுகளை வகைப்படுத்தி இறுதியகற்றலுக்கு ஒத்துழைத்தல்.

*கழிவுநீரைத் தேக்கிக்கொள்ளக்கூடிய வகையில் நிறுவனச் சூழலில் காணப்படும் பொருட்களைஅகற்றுவதுடன்அவ்வாறான இடங்களையும் நீர் தேங்காதவாறு மூடிவிடுதல்.

*உக்கிப்போகாத திண்மக்கழிவுகளை ஓரிடத்தில் சேகரித்து இறுதி அகற்றலுக்கு உதவுதல்.

*பிளாஸ்ரிக் , பொலித்தீன் கழிவுகளை அதற்குரிய பைகளில் சேகரித்தல்.

*உக்கிப்போகக்கூடிய திண்மக்கழிவுகளை உரமாகக்கூடிய வகையிலான செயற்பாடுகளை மேற்கொள்ளல். அல்லது இறுதியகற்றலுக்காக ஓரிடத்தில் சேகரித்தல்.

### சுற்றுச்சூழல் அதிகாரிகள்

*பிரதேசத்தில் நடைபெறுகின்ற கழிவகற்றல் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்திக் கண்காணித்தல்.

*பிரதேச சபையின் இறுதிகழிவகற்றலுக்குச் சரியான திட்டமிடலை வரைந்து கொடுத்தல்.

*செயற்பாடுகளின்போதான இரட்டைத் தன்மைகளை தவிர்க்கும் வகையில் பிரதேசங்களை ஒழுங்குபடுத்தல்.

*கழிவகற்றல் செயற்பாட்டின் வினைத்திறன் தன்மையை உறுதிப்படுத்தல்.

*சுற்றுச்சூழல் முன்னோடி தினத்திற்கு முன்னதாக விழிப்பு நடவடிக்கைகளை முழுமையாக மேற்கொள்ளல்.

(புத்திரிகைகள், வானொலி துண்டுப்பிரசுரம் கருத்தரங்குகள்).

### மாகாண சுகாதாரசேவை பிரதிப்பணிப்பாளர்களும் சுகாதார வைத்திய அதிகாரிகளும்

*வைத்தியசாலைக் கழிவகற்றல் தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

*இறுதியகற்றலுக்கு ஒத்துழைத்தல்.

*கழிவகற்றும் இடங்களில் கழிவுநீரைத் தேக்கிக்கொள்ளக்கூடிய வகையல் காணப்படும் பொருட்களை அகற்றுவதுடன் அவ்வாறான இடங்களையும்நீர்தேங்காதவாறுமூடிவிடுதல்.

*உக்கிப்போகாத திண்மக்கழிவுகளை ஓரிடத்தில் சேகரித்து இறுதி அகற்றலுக்கு உதவுதல்.

*பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகளை அதற்குரிய பைகளில் சேகரித்தல்.

*கழிவுகளைச் சேகரிக்கக்கூடிய வகையில் ஒவ்வொரு வைத்தியாசலையிலும்சேகரிப்பான்களை தேவையான இடங்களில் வைத்தல்.

*வைத்தியசாலைகளில் இந்நடைமுறைகளை தொடர்ச்சியாக கடுமையாக அமுல்படுத்தல்.

*உக்கிப்போகக்கூடிய விலங்கு மற்றும் ஏனைய திண்மக்கழிவுகளை உரமாகக்கூடிய வகையிலான செயற்பாடுகளை மேற்கொள்ளல் அல்லது இறுதியகற்றலுக்காக ஓரிடத்தில் சேகரித்தல்.

*சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு சம்பந்தமான கருத்தூட்டல்களையும் விழிப்புணர்வுகளையும் மேற்கொள்ளல் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

*பொருத்தமான இடங்களில் மரக்கன்றுகளை நாட்டிப் பராமரிப்பதன் மூலம் தாயகத்தின் பசுமைச் சூழலைப் பேணுதல்.

*சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பில் தொற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வுகளை மேற்கொள்ளல்.

### உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள், சமூகமட்ட அமைப்புக்கள்

*தமது இலக்குப் பிரதேசம் பணிப்பிரதேசத்தில் கழிவகற்றல் பணிக்காகத் தொடர்புடையவர்களுடன் இணைதல்.

*கழிவகற்றல் பணியினை மேற்கொள்ளும் போது அகற்றப்படும் கழிவுகளைவகைப்படுத்த இறதியகற்றலுக்கு ஒத்துழைத்தல்.

*கழிவுநீரைத் தேக்கிக்கொள்ளக்கூடிய வகையில் காணப்படும் பொருட்களை அகற்றுவதுடன் அவ்வாறான இடங்களையும் நீர் தேங்காதவாறு மூடிவிடுதல்.

*உக்கிப்போகாத திண்மக்கழிவுகளை ஓரிடத்தில் சேகரித்து இறுதி அகற்றலுக்கு உதவுதல்.

*பிளாஸ்ரிக் , பொலித்தீன் கழிவுகளை அதற்குரிய பைகளில் சேகரித்தல்.

*உக்கிப்போகக்கூடிய திண்மக்கழிவுகளை உரமாகக்கூடிய வகையிலான செயற்பாடுகளை மேற்கொள்ளல் அல்லது இறுதியகற்றலுக்காக ஓரிடத்தில் சேகரித்தல்.

*கழிவு சேகரிக்கக்கூடிய பைகளை வழங்குவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

*சுற்றுச்சூழல் தொடர்பான விழிப்புணர்வு பிரச்சாரங்களை மேற்கொள்ளல்.

### சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள்

*ஒவ்வொரு நிறுவனமும் தமது உட்புறச் சூழலையும் எல்லைப்புறச் சூழலையும் சுத்தம் செய்தல்.

*நிறுவனத்தின் கழிவுகளை சேகரிக்கக்கூடிய வகையில் சேகரிப்புப் பைகள் கழிவு சேகரிப்பான்களை வகைப்படுத்தி வைத்தல்.

*கழிவகற்றல் பணியினை மேற்கொள்ளும் போது அகற்றப்படும் கழிவுகளை வகைப்படுத்தி இறுதியகற்றலுக்கு ஒத்துழைத்தல்.

*கழிவுநீரைத் தேக்கிக்கொள்ளக்கூடிய வகையில் நிறுவனச் சூழலில் காணப்படும் பொருட்களை அகற்றுவதுடன் அவ்வாறான இடங்களையும் நீர் தேங்காதவாறு மூடிவிடுதல்.

*உக்கிப்போகாத திண்மக்கழிவுகளை ஓரிடத்தில் சேகரித்து இறுதி அகற்றலுக்கு உதவுதல்.

*பிளாஸ்ரிக், பொலித்தீன் கழவுகளை அதற்குரிய பைகளில் சேகரித்தல்.

*உக்கிப்போகக்கூடிய திண்மக்கழிவுகளை உரமாகக்கூடிய வகையிலான செயற்பாடுகளை மேற்கொள்ளல். அல்லது இறுதியகற்றலுக்காக ஓரிடத்தில் சேகரித்தல்.

*கழிவகற்றல் பணியில் ஏனையவர்களுடன் இணைந்துகொள்ளல். (து)

(முற்றும்)

---

## பிரத்தியேக ஆங்கில வகுப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த ஜூன் மாதம் 24ஆம் திகதி இடம்பெற்ற மத்திய மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தின் 6ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தினபோது எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யா.மததிய கல்லூரியில் சங்க அங்கத்தவர்களுக்கான பிரத்தியேக ஆங்கில வகுப்பு நடாத்தப்படவுள்ளது.

மேற்படி பிரத்தியேக ஆங்கில வகுப்புக்கள் வார இறுதி நாட்களான சனி, ஞாயிறு தினங்களில் மாத்திரம் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# புத்தளத்தில் ரயில் - வான் விபத்து வடமராட்சி வாசிகள் மூவர் படுகாயம்

(புத்தளம்)

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த வான் ஒன்று புத்தளம் பாலாவிப் பகுதியில் ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானதில் வடமராட்சி வாசிகள் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை 12.15 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்தில் வானில் பயணித்த வல்வெட்டித்துறையைச் சேர்ந்த செல்லத்துரை தினேந்தர்தாசன், தங்கராசா நகுலேஸ்வரன் மற்றும் நெல்லியடியைச் சேர்ந்த முருகேசு சபேஷன்குமார் ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்.

இதில் பயணம் செய்த ஏனைய ஐவரும் தெய்வாதீனமாக காயமின்றித் தப்பியுள்ளனர்.

படுகாயமடைந்த இவர்கள் மூவரும் புத்தளம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

புத்தளம் சீமெந்துக் கூட்டுத்தாபனத்திற்கு சுண்ணக்கற்களை ஏற்றுவதற்காகச் சென்ற புகையிரதத்துடனேயே இவ் வான் மோதி விபத்துக்குள்ளானது.

புகையிரபாதையின் பாதுகாப்புக் கடவை மூடப்பட்டிருந்த போதும், பிரஸ்தாப வானின் சாரதி அதனைப் பொருட்படுத்தாமல் வானை செலுத்த முற்பட்டபோதே இவ் விபத்து சம்பவித்ததாக, கடமையில் இருந்த புகையிர நிலைய அதிகாரி பொலிஸாருக்கு அளித்த வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இக் கடவையில் பலமுறை விபத்து சம்பவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-15)

## மின்வெட்டு

பண்டைத்தரிப்பு ,சில்லாலை, மாதகல், வடலியடைப்பு போன்ற இடங்களில் இரவு நேரங்களில் அடிக்கடி மின்வெட்டு இடம்பெற்று வருகின்றது.இச்செயற்பாடுகள் சுமார் ஒரு மாத காலமாக நீடித்து வருகின்றது. இரவு 6 மணிதொடக்கம் 7 மணி வரை அல்லது இரவு 7மணி தொடக்கம் 8மணிவரை மின் விநியோகம் துண்டிக்கப்படுகிறது. இதற்கான காரணம் யாதெனத் தெரியவில்லை.

இவ்வாறான மின்வெட்டால் மக்கள் பெரும் இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர். மின்சாரமின்மையால் பெரும்பாலான கடைகள்நேரத்துடன் பூட்டப்படுகின்றன.இது தொடர்பாக மின்சாரசபை கவனமெடுத்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (ற-58)

## தொழிற்சாலைக்கு வாகனம்

(இணுவில்)

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரால் இயக்கப்படும் ஜசுபி பழத் தொழிற்சாலைக்கு அரச அதிபரும், விவசாயத் திணைக்களமும் வாகனம் வழங்க உறுதியளித்துள்ளதாக சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார். (அ-122)

# பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் உள்ள பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, முனை ஆகிய மூன்று கிராமசேவையாளர்கள் பிரிவுகளிலும் மூன்று அரச சார்பற்ற நிறுவனங்கள் வாழ்வாதார மேம்பாட்டுத்திட்டங்களை அமுல்படுத்த ஆரம்பித்துள்ளன.

இலங்கையிலுள்ள சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமுல்செய்யப்படுகின்ற இத் திட்டத்தின் மூலம் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பயனடையவுள்ளன.

இத்திட்டத்தினை அறவழிப் போராட்டக் குழு பருத்தித்துறை கிராம சேவையாளர் பிரிவிலும், வெண்புறா நிறுவனம் வல்வெட்டித்துறை கிராம சேவையாளர் பிரிவிலும், சர்வோதய நிறுவனம் முனை கிராமசேவையாளர் பிரிவிலும் அமுல்செய்ய ஆரம்பித்துள்ளன.

இதனடிப்படையில் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு கட்டுமரங்கள் மற்றும் வலைகள் வழங்கப்படவுள்ளதுடன் ஏனைய தொழில் முனைவோருக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கான நிதியுதவியும் வழங்கப்படும் எனத் தெரிய வருகின்றது.

இத்திட்டங்களுக்கான தேவை மதிப்பீடுகள் மற்றும் பயனாளிகள் தெரிவு யாவற்றையும் திட்டத்தினை அமுல் செய்யும் மூன்று அரச சார்பற்ற நிறுவனங்களும் பூர்த்தி செய்துள்ளன எனவும் தெரியவருகின்றது.

இதேசமயம் வாழ்வாதாரத் திட்டத்தில் பணிபுரியும் 20ற்கும் மேற்பட்ட பணியாளருக்கு சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் யாழ்ப்பாணத்தில் 38 நாட்கள் பயிற்சிகளை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (த-16)








நேற்று முன்தினம் மணலாற்றில் நடைபெற்ற லெப்.கேணல் திருவடி பயிற்சிக் கல்லூரியின் முதலாவது துணைப்படை பயிற்சி நிறைவு நிகழ்வுக் காட்சிகள்.

# வன்முறைகளற்ற தேர்தல் நடைபெற இருதரப்பும் ஒத்துழைக்க வேண்டும்

## பிரட்ஸ்கர் வேண்டுகோள்

(கிளிநொச்சி)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழர் பிரதேசங்களில் வன்முறைகள் இன்றி தேர்தல் நடைபெற வேண்டுமென்று இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளதாகவும் இதற்கு விடுதலைப் புலிகள் இணங்கியிருப்பதாகவும் பிரட்ஸ்கர் கூறினார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் கருத்து வெளியிடும்போதே பிரட்ஸ்கர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது நாட்டில் இடம்பெற்றுவரும் அரசியல் வன்முறைகளினால் சமாதான முயற்சியும் யுத்த நிறுத்த ஒப்பந்தமும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தடுத்து நிறுத்தி யுத்த நிறுத்த ஒப்பந்தத்தையும் சமாதான முயற்சிகளையும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு புலிகளும் அரசும் உணர்ந்து செயற்பட வேண்டும் அப்போதுதான் இந்த நாட்டின் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-8)

# யாழ்.பல்கலையின் 24ஆவது பட்டமளிப்பு விழா 2 ஆம் நாள் காட்சிகள்...

























(படங்கள்:-தெ.திலீப்,ச.தவராசா)

## இன்று ஒரு தகவல்

# அழைக்கும் குரல்

ஒரு அலுவலகத்தில் வேலைக்கு ஆள் தேவை அதற்காக அங்கு நேர்முகத் தேர்வு நடந்து கொண்டிருக்கிறது. அது என்ன வேலை என்றால்... கம்பியில்லாத் தந்திக் கருவியை இயக்கும் வேலை.

நிறைய இளைஞர்கள் வாசலில் நேர்முகத் தேர்வுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். வரிசையாக உட்கார்ந்திருக்கிறார்கள்.

எல்லோரும் சும்மா உட்கார்ந்திருக்கவில்லை. அருகில் இருப்பவர்களிடம் எதை எதையோ பேசி அரட்டை அடித்துக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் அங்கு கடைசியில் உட்கார்ந்திருந்த ஓர் இளைஞன் மட்டும் யாரிடமும் பேசாமல் அமைதியாக உட்கார்ந்திருந்தான்.

தேர்வு அதிகாரிகள் இருந்த அறைக்குள் இருந்து கம்பியில்லாத் தந்திக் கருவியின் சத்தம் மட்டும் லேசாகக் கேட்டுக்கொண்டிருந்தது.

அரட்டை அடித்துக் கொண்டிருந்த இளைஞர்கள் இந்த சத்தத்தைக் கவனிக்கவில்லை. அவர்கள் ஊர் விவகாரங்களை அலசுவதிலேயே தீவிரமாக இருந்தார்கள்.

ஆனால் கடைசியில் தனியாக உட்கார்ந்திருந்த அந்த ஓர் இளைஞன் மட்டும் கம்பியில்லாத தந்திக் கருவியிலிருந்து வெளியான அந்த ஒலிக் குறிப்புகளைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தான்.

அதைக் கேட்டு முடித்ததும் அவன் திடீரென்று எழுந்து அதிகாரிகள் இருந்த அறைக்குள் நுழைந்தான். "ஏன் இப்படி இவன்... யாரும் கூப்பிடாமல் திடீரென்று எழுந்து உள்ளே போகிறான்" என்ற விபரம் மற்றவர்களுக்குப் புரியவில்லை!

உள்ளே சென்ற இந்த இளைஞன் சிறிதுநேரம் கழித்து வெளியே வந்தான். அவன் வெளியே வரும்போது அங்கு வேலையில் நியமிக்கப்பட்டதற்குரிய உத்தரவுக் கடிதம் அவன் கையில் இருந்தது. உத்தரவுக் கடிதத்தை கையிலேயே வாங்கிக் கொண்டுவந்துவிட்டான்.

இதைப் பார்த்ததும் அங்கிருந்த மற்ற இளைஞர்களெல்லாம் கோபப்பட்டார்கள்.

"இது என்ன அநியாயம்...? நாங்கள் இங்கு முதலிலேயே வந்து நீண்டநேரமாகக் காத்துக் கொண்டிருக்கிறோம்... நீ கடைசியில் வந்தவன்... எங்களுக்கு முன்னால் நீ எப்படி உள்ளே போகலாம்... வரிசைப்படி எங்களை முதலில் சோதிக்காமல் திடீரென்று உனக்கு மட்டும் எப்படி வேலை உத்தரவுக் கடிதம் கொடுத்தார்கள்?" என்று கேட்டு கூச்சல் போட ஆரம்பித்தார்கள்.

அதற்கு அந்த இளைஞன் பதில் சொன்னான். "உங்களையெல்லாம் சோதித்துவிட்டு அதற்குப் பிறகுதான் எனக்கு இந்த வேலையைக் கொடுத்தார்கள். அந்த அறைக்குள்ளிருந்த கம்பியில்லாத் தந்திக்கருவி மூலமாக... ஒலிக் குறிப்புகளால் அந்த அதிகாரிகள் செய்தி அனுப்பினார்கள். அதை நீங்கள் கவனிக்கவில்லை!" என்றான். "என்ன செய்தி அனுப்பினார்கள்?" என்று அதுவரையில் அரட்டையில் மூழ்கியிருந்த இளைஞர்கள் வினவினார்கள்.

"அதிகாரிகள் ஒலிக்குறிப்பு மூலமாக அனுப்பிய செய்தி இதுதான். அதாவது "எங்களுக்கு எந்த நேரமும் அக்கறையும் கவனமும் உள்ள இளைஞனே தேவை" இந்தச் செய்தியைப் புரிந்துகொண்டு உள்ளே சென்றேன்... வேலை கிடைத்தது!" என்று விளக்கினான் இளைஞன். அரட்டைக் கச்சேரியில்- வம்பளப்பதில் கவனம் சிதறியதால் அங்கிருந்த மற்ற இளைஞர்களால் அதிகாரிகளின் அழைப்பைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

இந்தக் கதையை ஓர் ஆன்மீகப் பெரியவர் கூறியிருக்கிறார்.இந்தக் கதையின் மூலம் அவர் தெரிவிக்கும் கருத்து இதுதான்.

"இறைவனும் இதுபோன்ற அழைப்புகளைத் தொடர்ந்து நமக்கு அனுப்பிக் கொண்டே இருக்கிறார். இறைவனின் மொழியாக இயற்கை விளங்குகிறது. இயற்கையில் குறிப்புகள் வடிவத்தில் இருக்கும் அழைப்புகளை நாம் அமைதியாகவும் அக்கறையாகவும் இருந்து முயற்சி செய்தால் புரிந்துகொள்ளமுடியும். கவனத்தைக் கண்டபடி சிதறவிடாமல் இருந்தால் இதைப் புரிந்துகொண்டு இறைவனை நெருங்கமுடியும்" என்கிறார் அந்தப் பெரியவர். இது நமக்கெல்லாம் இறைவன் நடத்திக் கொண்டிருக்கும் இயற்கை நடத்திக்கொண்டிருக்கும் இன்ரவியூ.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# உலக விளையாட்டு அரங்கில் தமிழீழ வீரர்கள் வெற்றிகளைக் குவிக்கும் நாள் விரைவில் வரும்

## அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

உலக விளையாட்டு அரங்கங்களில் தமிழீழ தேசத்தினுடைய வீரர்கள் ஆற்றல் உள்ளவர்களாக நிரூபிக்க வேண்டும். வெற்றிகளைக் குவிக்கவேண்டும் என்பது நம் தேசத்தின் கனவு என்று தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறினார்.

அகில இலங்கை ரீதியாக வெற்றி பெற்ற தமிழர் தாயக வீரர்களை சிறப்பிக்கும் நிகழ்வு கிளிநொச்சி தூயவன் அரசறிவியல் கல்லூரியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

தமிழர் தாயக வீரர்களுக்கும் பயிற்சியாளர்களுக்கும் பரிசில்களை வழங்கி சிறப்பித்த தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழச்செல்வன் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யுத்த நெருக்கடி தணிந்திருக்கின்ற இன்றைய சூழலல் எமது சிறார்களின் கல்வியும் விளையாட்டும் வளர்ச்சியடைய வேண்டும். எமது இளைய தலைமுறையின் உடல்உள ஆரோக்கியத்துடன் இந்தத் தேசத்திலே உலாவ வேண்டும். வளர்ச்சியடைய வேண்டும் என்பது எமது தலைவரின் எதிர்பார்ப்பு.

எமது தலைவரின் விருப்புக்கேற்பவும் ஆலோசனைக்கமையவும் கல்வி விளையாட்டுத் துறைகளை வளர்த்து வருகிறோம். கல்வி, விளையாட்டுத் துறைகளை இருக்கின்ற வளங்களைக் கொண்டு இயன்றவரை வளர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றோம்.

அதில் நாம் முழுமையடைந்ததாகக் கூற முடியாது. எமது தேசத்திற்கான நிரந்தரமான தீர்வு வருகின்றபோது எமது இளைய தலைமுறையினரை சிறப்பாக கல்வி,விளையாட்டுத்துறைகளில் வளர்த்துச் செல்ல வேண்டும் என்ற பேரவா எமக்குண்டு.

ஆனால் இன்று கூட ஒரு நெருக்கடியான காலமாக இருந்தாலும் எமது சிறார்களை ஆரோக்கியமான முறையில் வளர்க்க வேண்டும் என்பதில் உறுதியாகவுள்ளோம். குறிப்பாக கல்வி, விளையாட்டுத்துறைகளில் சிறார்கள் மிக சிறப்பான ஆற்றல்களை வெளிப்படுத்த வேண்டும் என்பதில் எமது தலைவர் பெருவிருப்பாகவுள்ளார்.

தமிழர் தாயகத்தில் விளையாட்டுத்துறையினை வளர்த்தெடுப்பதற்கு அனைவரும் உழைக்க வேண்டும். இலங்கைத் தீவிலே தமிழர் தேசம் விளையாட்டுத் துறைகளில் முன்னணி வீரர்களாக வந்து உலக அரங்கில் பிரகாசிக்க முடியாத ஒரு இக்கட்டில் நாம் உள்ளோம். உலக அரங்கில் நாம் விளையாட்டுக்களை நிகழ்த்தக்கூடிய நாள் வரவேண்டும். விளையாட்டுத் துறை உட்பட அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி பெற்று உலக அரங்கில் மிளிரவேண்டும்.

பூமிப் பந்திலே தமிழீழ தேசத்தினுடைய வீரர்கள் ஆற்றல் உள்ளவர்களாக நிரூபிக்கவேண்டும் என்பதில் எமது தேசத்தின் கனவாகவுள்ளது. அதனை நோக்கித் தான் எமது தலைவரும் எமது விடுதலை அமைப்பும் எமது மக்களும் ஒரு அரசியல் போராட்ட மைதானத்திலே தீவிரமாக செயற்பட்டுக்கொண்டு வருகின்றோம்.

நாம் ஒரு போராட்ட சூழலில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் வளர்ந்து வரும் எமது இளம் சந்ததிதான் எதிர்காலத்தில் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும். பல உயிர்களை விலையாகக் கொடுத்து கட்டியெழுப்பி வரும் எமது தேசத்தில் எதிர்கால சந்ததி மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்ற குறிக்கோளுக்காகத்தான் எமது தலைவர் எமது விடுதலைப் போராட்டத்தை நகர்த்தி வருகின்றார். மலரப் போகின்ற தேசத்திலேயே எமது இளைய தலைமுறையினர் மகிழ்ச்சியாக வாழவேண்டும்.

உலக வீரர்கள் சங்கமிக்கும் ஒலிம்பிக் போட்டிகளில் தமிழர் தாயக வீரர்கள் வெற்றிகளைக் குவிக்க வேண்டும் என்பது எமது கனவாகவுள்ளது. அது நிறைவேற எமது தாயக வீரர்கள் உழைக்கவேண்டும்.

விளையாட்டுத்துறையில் தமிழர் தாயகம் எதிர்காலத்தில் பல வெற்றிகளைக் குவிக்கவேண்டும்.

உலக அரங்கில் எமது அடையாளங்களை நிலைப்படுத்திக் கொள்ளக் கூடிய நாள் விரைவில் வரும். இன்றைய நிகழ்வில் கலந்துகொண்டுள்ள வெற்றியீட்டிய வீரர்களை எமது தேசியத் தலைவரின் சார்பில் சிறப்பிப்பதில் நாம் பெருமகிழ்வடைகிறோம் என சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தமிழீழ விளையாட்டுத்துறை தலைவர் ம.பத்மநாதன் தலைமையுரையினை நிகழ்த்தினார்.(அ-4)

# சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் அறிக்கை மஹிந்த ராஜபக்ஷவின் குரலாகவே அமையும்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் அறிக்கையானது அக்கட்சி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவின் குரலாகவே வெளிப்படக்கூடும் என்று சுதந்திரக் கட்சியினர் தெரிவித்தனர்.

இதன் பிரச்சினைக்கு ஒற்றையாட்சி முறையிலேயே தீர்வு காணப்படவேண்டும் என்ற மஹிந்தவின் கருத்து பிரதானமாக அந்தத் தேர்தல் அறிக்கையில் இடம்பெறக்கூடும்.

கடந்த வெள்ளிக்கிழமையன்று நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் விசேட மத்தியகுழுக் கூட்டத்தில் கட்சியின் கொள்கைகளே தேர்தல் அறிக்கையில் இடம்பெறவேண்டும் என்று கட்சித் தலைவர் சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருந்தார்.

இனப் பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கை என்ற கோட்பாட்டின் கீழ் கூட்டாட்சி முறையில் தீர்வுகாண வேண்டும் என்பதே சுதந்திரக் கட்சியின் கொள்கையாகும் என்றும் சந்திரிகா கூறியிருந்தார்.

ஆனால் ஒற்றையாட்சி அடிப்படையில் குறிப்பிட்ட காலத்திற்குள் குறிப்பிட்ட செயற்திட்டத்தை முன்வைத்து இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் எனபதை சுதந்திரக் கட்சியின் தேர்தல் அறிக்கை வலியுறுத்தக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பு தொடர்பாக சுதந்திரக் கட்சியில் இடம்பெறவுள்ள விடயங்களை தெரிவிக்க மறுத்த சுதந்திரக் கட்சியினர் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனரமைப்பு மற்றும் மீளமைப்புப் பணிகளை உடனடியாக நிறைவேற்றும் செயல் திட்டம் தேர்தல் அறிக்கையில் இடம்பெறும் என்று கூறினர்.

ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ தேர்ந்தெடுக்கப்பட்டால் அவரது முதலாண்டு ஆட்சிக் காலத்தில் இரண்டு இலட்சம் பேருக்கு நேரடியாக வேலைவாய்ப்புக்களை வழங்குவார் என்றும் சுயதொழில் தொடங்க ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்படும் என்பன போன்ற வாக்குறுதிகளும் அந்தத் தேர்தலில் வழங்கப்படக்கூடும்.

வேட்பு மனுத்தாக்கலுக்கு பிறகு 5நாட்களுக்குள்ளாக இந்தத் தேர்தல் அறிக்கை வெளியிடப்படக் கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே கொழும்பில் ஊடகவியலாளர்களிடம்பேசிய சுதந்திரக் கட்சியின் தேர்தல் ஒருங்கிணைப்பாளர் மங்கள சமரவீர, பொது மக்கள் கூட்டமைப்புக்கும் ஜே.வி.பிக்கும் இடையே கடந்த தேர்தலில் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின் சரத்துகள் பெரும்பாலானவை சுதந்திரக் கட்சியின் இந்தத் தேர்தல் அறிக்கையிலும் இடம்பெறும் எனத் தெரிவித்தார். (அ-4)

# கடந்த தேர்தலில் செய்த தவறையே— இ.தொ.கா., மு.கா மீண்டும் செய்துள்ளன

## -மங்கள சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கடந்த பொதுத் தேர்தலின் போது இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் மேற்கொண்ட அதே தவறை தற்போது மீண்டும் அவை செய்துள்ளன என்று அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இவர்களுடன் மலையக மக்கள் முன்னணியும் மேல்மாகாண மக்கள் முன்னணியும் இணைந்துள்ளன என்றும் ஆளும் கட்சியின் தேர்தல் ஒருங்கிணைப்பாளரான மங்கள சமரவீர குற்றம்சாட்டியுள்ளார்.

எனது அருமை நண்பர் ஆறுமுகன் தொண்டமான் அரசியல் தற்கொலை செய்து கொள்கிறார் என நான் ஏற்கனவே கூறியிருந்தேன். அது தான் அவரின் வாழ்க்கையும் ஆகிவிட்டது. ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின் வரலாற்றின் குப்பைத்தொட்டியில் அவர் வீசி எறியப்படுவார்.

பாராளுமன்றில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனித்துச் செயற்படும் என அறிவிக்கப்பட்டிருந்தாலும் தோட்டத் தொழிலாளர்கள் பற்றி மஹிந்த ராஜபக்ஷவைத் தான் ஆதரிப்பார்கள் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ந-4)

# சீ.வி.கே.க்கு தேநீர் விருந்து

ஏறத்தாழ இரண்டு தசாப்த காலத்திற்கு முன் யாழ். மாநகரசபை ஆணையாளராகக் கடமையாற்றிய சீ.வி.கே.சிவஞானம் மீண்டும் யாழ். மாநகர சபை ஆணையாளராக நியமிக்கப்பட்டதை கௌரவிக்குமுகமாக இன்று மாலை 6 மணிக்கு நல்லூர் சங்கிலியன் மன்றத்தால் அவருக்குத் தேநீர் விருந்து அளிக்கப்படவுள்ளது. (து)

# புற்றுநோய் பரிசோதனை

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள 50 வயதுக்கு மேற்பட்ட ஆண்,பெண் இருபாலருக்கும் புற்றுநோய் தொடர்பான பரிசோதனையை இன்றும் நாளையும் மேற்கொள்வதற்கான சகல ஏற்பாடுகளையும் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மேற்கொண்டுள்ளது.

இப் பரிசோதனை தெரிவுசெய்யப்பட்ட 12 நிலையங்களில் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் இது தொடர்பான மேலதிக விபரங்களை தங்கள் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர், குடும்பநல சேவை உத்தியோகத்தர், சுகாதார தொண்டர்கள் ஆகியோர் ஊடாகப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் இதில் நல்லூர் /கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் அடங்கும் 50 வயதுக்கு மேற்பட்டவரையும் தவறாது சமுகமளிக்குமாறும் தெரி கப்பட்டுள்ளது. (து-[illegible])

# அல்-கெய்டா தீவிரவாதிகள் அமெ.இல் 10 முறை தாக்குதல் நடத்த முயற்சி

## அதிபர் புஷ் தகவல்



(வோஷிங்டன்)

உலக வர்த்தக மையம் மீது 2001ஆம் ஆண்டு தாக்குதல் நடத்திய பிறகு மீண்டும் தாக்குதல் நடத்த அல்-கெய்டா தீவிரவாதிகள் 10தடவை முயற்சி செய்தனர். ஆனால் அந்த முயற்சி முறியடிக்கப்பட்டது என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் வோஷிங்டனில் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட போது கூறியுள்ளார்.

அல்-கெய்டா தீவிரவாதிகள் உலகம் முழுவதும் தங்கள் கைவரிசையைக் காட்டி வருகிறார்கள் கடந்த 2001ஆம் ஆண்டு நியூயோர்க்கில் உள்ள வர்த்தகமையக் கட்டடத்தை தகர்த்தபிறகு மீண்டும் அதுபோன்ற தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்தனர். இதுவரை 10 முறை இந்தத் தாக்குதல் முயற்சி நடந்தது. ஆனால் அந்த முயற்சிகள் யாவும் முறியடிக்கப்பட்டு விட்டன.

ஈராக் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியது சரியான நடவடிக்கைதான் ஈராக் மீது தாக்குதல் நடத்தவேண்டும் என்பது கடவுளின் கட்டளை. சிரியா, ஈரான் போன்ற நாடுகள ஈராக் தீவிரவாதிகளுக்கு உதவி செய்து வருகின்றன. இவ்வாறு ஜோர்ச் புஷ் அங்கு கூறினார்.

அல-கெய்டா தலைவன் பின்லேடன் ஈராக்கில் உள்ள அல்-கெய்டா இயக்கத்தலைவன் அபுமுஷாப் அல்-சர்காவி ஆகியோர் பற்றித் துப்புக்கொடுத்தால் 90கோடி டொலர் வழங்கப்படும் என்று அமெரிக்கா ஏற்கனவே அறிவித்திருந்தது. இப்போது துல்மார்த்தின் என்ற அமர் உஸ்மான் பற்றி துப்புக்கொடுத்தால் 46கோடி டொலர் பரிசு வழங்கப்படும் என்றும் அமெரிக்கா அறிவித்திருக்கிறது.

இந்தத் தீவிரவாதி கடந்த 2002ஆம் ஆண்டில் இந்தோனேசியாவில் குண்டு வைத்து 202 பேரை கொன்றவன். இவன் அமெரிக்காவிலும் மிகப்பெரிய தாக்குதல் நடத்த திட்டமிட்டிருப்பதாக அமெரிக்க புலனாய்வுத்துறைக்கு தகவல் கிடைத்துள்ளது. (ற)

உலக தரிசனம்




அமெரிக்காவில் 'கத்ரீனா' சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முன்னாள் அதிபர் பில்கிளிண்டன் ஆறுதல் கூறிவருகிறார்.

மிசிசிபியில் உள்ள உதவி மையத்திற்குச் சென்ற போது அங்கு வசிக்கும் யானிதாம் சன் என்ற பெண் கிளிண்டனுக்கு அன்பாக முத்தம் கொடுத்து வரவேற்றார்.



சீனாவில் வீசிய சூறாவளி, பேய் மழை, மண் சரிவு, வெள்ளம் போன்றவற்றில் 45 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டமை தெரிந்ததே எங்கு பார்த்தாலும் சேறு சகதியுமாக காட்சியளித்தது. பொது மக்களே தத்தமது நகரை தூய்மையாக்கி வரும் காட்சி.



இரண்டுவாய், இரண்டு தொண்டைக் குழாய்களுடன் பிறந்த குழந்தைக்கு ஆந்திர மாநிலம் ஐதராபாத் காந்தி மருத்துவமனையில் கடந்த நான்காம் திகதி அறுவைச்சிகிச்சை நடந்தது. கன்னத்தில் கூடுதலாக இருந்த ஒரு வாய் மற்றும் ஒரு தொண்டைக் குழாயை டாக்டர் பிரபாகர் தலைமையிலான குழு வெற்றிகரமாக அகற்றியது. சிகிச்சை முடிந்து குழந்தை தற்போது நலமுடன் இருக்கிறது. சிகிச்சை மேற்கொள்வதற்கு முன் குழந்தை.

## பேய்களின் நகரமென வர்ணிப்பு

# நியூ ஆர்லியன்ஸுக்குத் திரும்பும் மக்கள்

(நியூ. ஆர்லியன்ஸ்)

'கத்ரீனா' சூறாவளியால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட அமெரிகாவின் நியூ ஆர்லியன்ஸ் நகர மக்களில் சிலர் நீண்ட நாட்களுக்குப் பின்னர் நேற்று தங்களின் வீடுகளுக்குத் திரும்பினர். ஆனால் வீடுகள் சேதமடைந்திருப்பதாலும் குடிநீர் வசதி இல்லாததாலும் பலர் இங்கு தங்கமுடியாது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிகாவின் லூசியானா மற்றும் டெக்சாஸ் மாகாணத்தை அண்மையில் 'கத்ரீனா' சூறாவளி தாக்கியது. இதில் நியூஆர்லியன்ஸ் நகரமே பெரிதும் பாதிக்கப்பட்டது. நகர் முழுவதும் வெள்ளம் சூழ்ந்தது ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இதில் இறந்தனர். ஏராளமான வீடுகளும் சேதமடைந்தனர். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இங்கு வசித்த பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர்.

கத்ரீனா சூறாவளி தாக்குதல் நடந்த பல நாட்களுக்குப் பின் தற்போது நியூ ஆர்லியன்ஸ் நகருக்கு பொதுமக்கள் திரும்பத் தொடங்கியுள்ளனர். பொலிஸ் மற்றும் இராணுவத்தினரால் வைக்கப்பட்டிருந்த தடுப்புக்களும் சோதனைச் சாவடி மையங்களும் நகரத்தில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. நகரம் முழுவதும் குப்பைகள் மலைபோல் குவிந்துள்ளன. தண்ணீரில் அடித்துச்செல்லப்பட்ட மரச் சாமன்கள் சிதறிக்கிடக்கின்றன.

இது குறித்து அங்கு கட்டடவேலை செய்துவந்த பனேகாஸ் என்பவர் நகரத்தைப் பார்த்தபின் கூறுகையில், "இது பேய்களின் நகரம், இதைத் தவிர சொல்வதற்கு ஒன்றும் இல்லை" எனத் தெரிவித்துள்ளார்.

நியூ ஆர்லியன்ஸ் நகர மேயர்ராய் நஜின கூறும் போது,

சூறாவளித் தாக்குதலுக்கு முன்பு இங்கு நான்கு இலட்சத்து 55ஆயிரம் பேர் வசித்து வந்தனர். இதில் 80 ஆயிரம் பேர் இங்கு திரும்பிவிட்டனர். இன்னும் இரண்டு இலட்சம் பேருக்கு இங்கு தங்குவதற்கான இடவசதிகள் செய்துகொடுக்கப்படும். சூறாவளியின் தாக்குதல்களுக்கு ஆளாகிய பின்பு சிதறி ஓடிய பொது மக்களுக்கு உடனடியாக தேவையான வசதிகளைச் செய்துகொடுக்க முடியாது நீருக்கடியில் ஏராளமான பொருட்கள் மூழ்கியுள்ளனர். ஒரு வாரத்திற்குள் இவற்றை அப்புறப்படுத்த முடியாது. வீட்டை விட்டு வெளியேறியவர்கள் இதற்காக சில நாட்கள் காத்திருக்க வேண்டும் என்றார்.

தற்போது சிலர் மட்டும் நியூ ஆர்லியன்ஸுக்குத் திரும்பியுள்ளனர். ஏராளமான வீடுகள் சேதமடைந்திருப்பதாலும் போதிய குடிநீர் வசதி இல்லாததாலும் இன்னும் பலர் அங்கு திரும்பாமல் உள்ளனர். (ற)

# சதாமை உயிருடன் விட்டால் தாக்குதல்களை நிறுத்துவோம்

## தீவிரவாதிகள் நிபந்தனை

(கெய்ரோ)

"ஈராக்கில் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டுமானால் சதாம் தூக்கில் இடப்பட மாட்டார் என உறுதியளிக்க வேண்டும்" என்று சதாம் ஆதரவுத் தீவிரவாதிகள் நிபந்தனை விதித்துள்ளனர். இது தொடர்பாக அமெரிகாவுடன் பேச்சு நடத்த முற்பட்டுள்ளதாகவும் ஈராக் அதிபர் ஜலால் தலபாணி கூறியுள்ளார்.

ஈராக் புதிய அதிபர் ஜலால் தலபாணி எகித்து பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில்,

2003ஆம் ஆண்டில் அமெரிக்கப் படையினரால் வெளியேற்றப்பட்ட சதாம் ஆதரவாளர்களே தற்போது ஈராக்கில் நடக்கும் தாக்குதலுக்கு பின்னணியில் உள்ளனர். தாக்குதலை நிறுத்த வேண்டும் என்றால் சதாமுக்கு தூக்குத்தண்டனை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்ற வழக்கு விசாரணையை நிறுத்த வேண்டும் என நிபந்தனை விதிக்கின்றனர். இது தொடர்பாக அமெரிகர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவும் முயற்சிக்கின்றனர் என்றார்.

சதாமை விசாரிக்க ஈராக்கில் சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது. மனிதாபிமானத்திற்கு எதிராக செய்த குற்றங்களுக்காக எதிர்வரும் 19இல் சதாம் விசாரிக்கப்படுவார். ஈராக்கில் 1982இல் 143பேர் படுகொலை செய்யப்பட்டதன் தொடர்பாக சதாம் ஈராக்கின் முன்னாள் துணைஅதிபர் மற்றும் சதாமின் உறவினர் உட்பட 6பேரிடம் விசாரணை நடத்தப்படவுள்ளதாக சிறப்பு நீதிமன்றம் தெரிவித்துள்ளது. இதில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் சதாமுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்படும். (ற)



ஆர்மோனியாவுக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த இந்தியத் துணை ஜனாதிபதி பைரோன் சிங் ஷெகாவத் அந்நாட்டு அதிபர் ராபர்ட் காச்சாரியனை சந்தித்த போது...

அமெரிக்கத் தலைநகர் வோஷிங்டனில் உள்ள தேசிய உயிரியல் பூங்காவில் இருந்த ஆண் ஒட்டகச்சிவிங்கி திடீரென உடல் நலம் பாதிக்கப்பட்டது. கால்நடை மருத்துவர்கள் பரிசோதனை செய்ததில் ஒட்டகச் சிவிங்கியின் தலையில் பெரிய கட்டியிருந்தது தெரியவந்தது. அதை அகற்ற கடந்த புதன்கிழமை சிகிச்சை நடந்த பொழுது...



நல்லசெய்தி கொண்டுவருபவனே துணிவோடு கதவைத் தட்டுவான் -அப்துற் றஹீம்

வலம்புரி

# நேரழப் பேச்சுக்கு அரசு தயாரா?

நேரடிப்பேச்சுக்களை நடத்துவதன் மூலம் சமாதான சூழலை ஏற்படுத்த முடியும். இவ்வாறு விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

நேரடிப்பேச்சுக்களை நடத்துவதன் மூலம் சமாதான சூழலை ஏற்படுத்த முடியுமென்ற தமிழ்ச்செல்வனின் அறிவிப்பிற்கு அரசு அதீத முக்கியத்துவம் கொடுப்பது அவசியமாகும்.

அரசும் விடுதலைப்புலிகளும் நேரடிப்பேச்சுக்களை நடத்துவதன் மூலமே இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியுமென்ற தகவலை கடந்த காலங்களில் அரச தரப்பினரும் சர்வதேச நாடுகளும் கூறியுள்ளனர்.

எனினும் இத்தகைய பேச்சுக்களை நடத்துவதில் அவர்கள் யாரேனும் முயற்சி செய்தார்களா? என்றால் இல்லையென்பது விடையாக இருக்கும்.

அவ்வாறாயினும் நேரடிப்பேச்சுக்கள் பற்றி அவர்கள் கூறியது எதற்காக என்ற கேள்வி எழுமாயின் நேரடிப்பேச்சுக்கு அரசு தயார் என்பது போலவும் ஆனால் அதற்கு விடுதலைப்புலிகள் தயார் இல்லை என்பதாகவும் சர்வதேச நாடுகளுக்கு காட்டுவதே அரச தரப்பின் நோக்கமாகும்.

சமாதான முயற்சியில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் இம்மியும் விருப்பமில்லாத சிங்கள ஆட்சியாளர்கள் சமாதான விரும்பிகளாக காட்ட முற்படும்போது பிசகுப்பாடு ஏற்படுவது தவிர்க்க முடியாததே.

இவ்வாறு அரச தரப்பு தப்பித்துக்கொள்வதற்காக சர்வதேசத்தின் காதுகளில் ஓதுகின்ற பொய்யுரைகளை விடுதலைப்புலிகள் அவ்வப்போது முறியடித்து உண்மை நிலையை வெளிப்படுத்தி விடுகின்றனர்.

குறிப்பாக சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் நிவாரணக் கொடுப்பனவுக்கான பொதுக் கட்டமைப்பில் விடுதலைப்புலிகளுடன் இணக்கப்பாடு காண்பதில் சிங்களத் தரப்புகள் எவ்வாறு நடந்துகொண்டன என்பதை உலக நாடுகள் நன்குணர்ந்திருக்கும்.

விடுதலைப்புலிகளுடன் இணங்கிப்போக தயார் என்றெல்லாம் கூறிய சிங்களத் தரப்புகள் பொதுக்கட்டமைப்பிற்கு உயிர்ப்புக் கொடுக்க முற்பட்ட வேளையில் எப்படி நடந்து கொண்டன?.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசில் இருந்த ஜே.வி.பியினர் தமது ஆதரவினை விலக்கிக்கொண்டு எதிர்க்கட்சி வரிசைக்குச் சென்றனர்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையை பாராளுமன்றத்தில் வாசிக்காமல் எதிர்ப்புத் தெரிவித்தார்.

சர்வதேச நாடுகள் பொதுக்கட்டமைப்பை வலியுறுத்திய போதிலும் இலங்கையின் சிங்கள ஆட்சியாளர்கள் நடந்து கொண்ட முறை சிங்கள ஆட்சியாளர்களின் கபடத்தனத்தை அம்பலப்படுத்தியது.

அதேபோன்றுதான் அரசின் இன்னுமோர் பொய்யுரையை முறியடிக்கும் வகையில் நேரடிப் பேச்சுப்பற்றி விடுதலைப்புலிகள் தங்கள் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளனர்.

இதற்கு தென்பகுதி அரசியல் தரப்புக்களின் பதில்தான் என்ன?

# வடக்கு-கிழக்கு வாக்காளர்கள் எனக்கு முழு ஆதரவைத்தருவர்

## -ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் உள்ள வாக்காளர்கள் தனக்கு முழு அளவிலான ஆதரவைத் தருவர் என்று நம்பிக்கையை வெளியிட்டிருக்கிறார் ரணில் விக்கிரமசிங்க.

கொழும்பு மாநகர மேயரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் திரண்டிருந்த தொழில் வல்லுநர்களின் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இந்த நம்பிக்கையை வெளியிட்டார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில், தமது கட்சிக்கு பத்து இலட்சம் மேலதிக வாக்குகள் கிடைக்க வாய்ப்புண்டு என்றும் இத்தொகைக்கு மேலதிகமாகவே வடக்கு-கிழக்கின் வாக்குகள் வரவுள்ளன என்றும் தெரிவித்தார்.

தேர்தல் பிரசாரங்களை குழப்பும் நடவடிக்கைகள் எதுவும் நடைபெறவில்லை. வடக்குக்கிழக்கில் விடுதலைப்புலிகள் தேர்தலைக் குழப்பும் நடவடிக்கைகளில் இறங்கமாட்டார்கள். வேட்பாளர்கள் அங்கு சுதந்திரமாக பிரசாரங்களைச் செய்யும் சூழல் இருக்கிறது.



முஸ்லிம்களுக்கு தனியான பிராந்தியம் ஒன்றை கிழக்கில் அமைக்கும் நோக்கத்தை முஸ்லிம் காங்கிரஸ் கொண்டிருப்பினும், அதனை அது சமாதானப் பேச்சுக்களில் முன்வைக்கும் என நாம நமபுகிறேன.

இதுவிடயமாக ஐக்கிய தேசியககட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசும் எனவும் ரணில் விக்கிரமசிங்க அங்கு மேலும் தெரிவித்தார். (ற)

## தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் 50 பேர் இன்று திருமலைக்கு விஜயம்

(திருகோணமலை)

தேசிய சமாதான பேரவையின் அனுசரணையுடன் தென்னிலங்கையில் இருந்து 50 ஊடகவியலாளர்கள் இன்று திருகோணமலைக்குச் செல்லவுள்ளனர்.

இன்று தொடக்கம் 11ஆம் திகதி வரை அங்கு அவர்கள் பல்வேறு வேலைத்திட்டங்களில் ஈடுபடவுள்ளனர்.

திருகோணமலைக்குச் செல்லும் இவர்கள் பிரதேச தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் பாடசாலைகளின் அதிபர்கள், சமூகப்பிரமுகர்கள், உள்ளூர் செய்தியாளர்கள், படை அலுவலகர்கள்,பொலிஸார் ஆகியோரைச் சந்திக்கவுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குச் செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இன்று தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரை வள்ளுவர் நிலையத்தில் சந்தித்து அவர்களின் வேலைத் திட்டங்கள் பற்றியும் தற்கால நடைமுறைகள் பற்றியும் அறியவுள்ளனர்.

நாளை பிற்பகல் 2 மணிக்கு சிவானந்த தபோவனத்தில் வைத்து பாடசாலை அதிபர்களையும், பொலிஸாரையும் உள்ளூர் செய்தியாளர்களையும் சந்தித்து கலந்துரையாடலை மேற்கொள்ளவுள்ளனர். (ற)

## வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க நடவடிக்கை

(கோண்டாவில்)

பொதுமக்கள்,மாணவர்களிடையே வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்குமுகமாக நல்லூர் பிரதேச சபையினால் இம் மாதம் வாசிப்பு மாதமாகக் கொண்டாடப்படுகிறது.

இச்செயற்பாட்டிற்காக பிரதேசசபை நூலகங்கள் திறக்கப்பட்டிருக்கும் நேரம் மாலை 6 மணியில் இருந்து 8 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் புத்தகங்கள் உள்ளூர், வெளியூர் சஞ்சிகைகள முதலியன மேலதிகமாக கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன அப்பகுதி கிராமசேவையாளர்களின் சிபாரிசுடன் அங்கத்தவர்களைப் புதிதாக சேர்க்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகிறது.

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்களிடையே பாடசாலை ரீதியில் வாசிப்புப் போட்டிகள் பொது அறிவுப்போட்டிகள் முதலியவற்றை நடத்தவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (து-36)

## புதிய அமைச்சர்கள் நியமனம்

(கொழும்பு)

இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் ஜனாதிபதித்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியை ஆதரிப்பது என எடுத்த முடிவினை அடுத்து ராஜினாமா செய்தவர்களுக்கும் அமைச்சுப் பதவிகளுக்கு புதியவர்களை நியமிக்கும் நடவடிக்கை இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்த வகையில் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சராக சி.வி.ரட்ணாயக்கவை மீண்டும் நியமிக்கவிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேவேளை, மத்திய மாகாண சபையில் வெற்றிடமாகவுள்ள அமைச்சுப்பொறுப்புக்கும் சபைத்தலைமைப் பொறுப்புக்கும் மலையக மக்கள் முன்னணியில் இருந்து பிரிந்து சென்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பதாகத் தெரிவித்த மாகாணசபை உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-9)

## சிறந்த உணவகங்கள் தெரிவு

(கோண்டாவில்)

இவ்வருட உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட உணவகங்களிடையே சிறந்த உணவகங்களைத் தெரிவு செய்யும் போட்டி ஒன்று நடத்தப்பட்டது. இப்போட்டியில் முதலாம் இடத்தை கே.கே.எஸ்.வீதி கொக்குவிலில் உள்ள மகாலக்சுமி உணவகமும் இரண்டாம் இடத்தை பரமேஸ்வராச் சந்தியில் உள்ள நியூ சரஸ்வதி விலாஸ் உணவகமும் மூன்றாம் இடத்தை இராமநாதன் வீதி திருநெல்வேலியில் உள்ள கண்ணன் லொட்ஜ் உணவகமும் பெற்றுக்கொண்டன.

தரமான உணவுகள், அவற்றை உற்பத்தி செய்யும் சுகாதார முறைகள் ,உணவகங்களில் பேணப்படும் சுகாதார நடவடிக்கைகள் என்பனவற்றின் அடிப்படையில் இப்போட்டி இடம்பெற்றதாக பிரதேச சபையின் உள்ளூராட்சி உதவியாளர் கு.தவசோதி தெரிவித்துள்ளார். (து-36)

## குமாரிகூரே தற்கொலை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக் கீமின் தொழிற்சாலையில் ஹக்கீம் தன்னை ஏமாற்றியதாக கூறி வந்த குமாரி கூரே தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் களுத்துறை மாவட்ட முனனாள் ஒருங்கிணைப்பாளர் மேர்வின் ஜே கூரேயின் மகள் குமாரி கூரே ஹக்கீம் தன்னுடன் உறவு வைத்திருந்ததாகவும் தன்னை வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி ஏமாற்றியிருந்தார் என முன்னர் குற்றம்சாட்டியிருந்தார்.

இந்நிலையில் ஹக்கீமின் ஐஸ்கிறிம் தொழிற்சாலையில் நேற்றுமுன்தினம் காலை அவர் தீக்குளித்து தற்கொலை செய்துகொண்டுள்ளார். தீக்குளித்து படுகாயமடைந்த அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார். (ச-4,8)

## ஐரோ.ஒன்றியத்தின் முடிவு குறித்து ஐ.தே.க.வின் நிலைப்பாடு என்ன?

### ஹெல உறுமய கேள்வி

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியம் தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்கதின் மீது விதித்த பயணத்தடைகள் பற்றிய ஐக்கிய தேசியக் கடசியின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துமாறு ஜாதிக ஹெல உறுமய ரணில் விக்கிரமசிங்கவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஹெல உறுமயவின் பொதுச்செயலாளர் சங்கைக்குரிய ஓமல்பே சோபிததேரர் விக்கிரமசிங்கவிற்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப்புலிகள் மீது விதித்த தடை இலங்கைக்கு முக்கியமானது. எனவே இது தொடர்பான ஐக்கிய தேசியக்கட்சியின் நிலைப்பாட்டை அறிந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் ஒன்றை ஒதுக்கித்தருமாறு சோபிததேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (த-9)

## தொழிலாளர் சாசனம் மீண்டும் நடைமுறைக்கு

(கொழும்பு)

தொழிலாளர் சாசனம் மீண்டும் நடைமுறைக்கு வரும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினருடனும் கலந்துரையாடிய பின்னர் இது பற்றிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டில் தொழில் புரிவோருடன் நேற்று முன்தினம் நடாத்திய நேரடிக் கலந்துரையாடலிலேயே இந்தக் கருத்துக்களை அவர் வெளியிட்டார்.

தாம் தொழிலமைச்சராக இருந்த சமயம் தயாரிக்கப்பட்ட தொழிலாளர் சாசனம் சம்பந்தமாக தப்பான கருத்துக்களை பல தரப்பினரும் வெளியிட்டதனால் அந்த சாசனம் தொடர்பாக இதுவரை எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை வெளிநாடுகளில் பணிபுரிவோரிடமிருந்து ஊழியர் நம்பிக்கை கொடுப்பனவுகளை பெற்றுக்கொடுப்பதற்கும் விசேட திட்டம் ஒன்று நடைமுறைக்கு வரும். அவர்களின் பாதுகாப்பு கருதி நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார். (ற-7)

## தினசரி தியானம்



### விவேகச் சிந்தனைகள்

எதை நினைக்கிறாயோ அதுவாகவே நீ ஆகி விடுகிறாய். ஸ்ரீ ராமகிருஷ்ணரைப்போன்ற அவதார புருஷரிடம் உனது சுமையை நீ ஒப்படைக்கும் போது அவரை நினைக்காமல் உன்னால் இருக்க முடியாது. அவரை நினைப்பதால் நீ அவரைப் போன்று ஆகி விடுகிறாய். அவர் மீது உனக்கு அன்பு சுரக்கிறது.

சுவாமி விவேகானந்தர்

# தென்மராட்சி பிரதேச சபையின் புதிய கட்டடம் நேற்றுத் திறப்பு



படம்:சாவகச்சேரி செய்தியாளர்

(சாவகச்சேரி)

புதிதாக அமைக்கப்பட்ட தென்மராட்சி பிரதேசசெயலகக் கட்டடம் நேற்று யாழ்.அரச அதிபர் கே.கணேஷினால் திறந்துவைக்கப்பட்டது.

முன்னதாக சாவகச்சேரி கைத்தொழில் மன்றத்தில் இருந்து விருந்தினர்கள் மங்கள வாத்தியங்களுடன் அழைத்துச்செல்லப்பட்டனர்.

மங்கள விளக்கினை யாழ்.அரச அதிபர் கே.கணேஷ்,பிரதம பொறியியலாளர் குகனேசன்,பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் ஏற்றிவைத்தனர்.

செயலகக் கொடியினை தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் ஏற்றிவைத்தார். கட்டடப் பெயர்ப்பொறிப்பை அரசஅதிபரும் பிரதம பொறியியலாளரும்திரைநீக்கம்செய்தனர்.

செயலகப் பெயர்ப்பலகையை அரச அதிபர் திரைநீக்கம்செய்தார். நிகழ்வின் இறுதியில் தென்மராட்சிப் பிரதேச மலரினை யாழ். அரச அதிபர் வெளியிட்டுவைக்க திட்டப்பணிப்பாளர் க.கேதீஸ்வரன் பெற்றுக்கொண்டார். (ச-108)

# மகிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனம் அடுத்த வாரம் வெளியிடப்படும்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மகிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனம் அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ளது.

தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரிக்கும் ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருவதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கும் அனைத்து அரசியல் கட்சிகளின் யோசனைகளுக்கு அமைய தயாரிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கைகளுக்கு அமையவும் இறைமையைப் பாதுகாக்கும் வகையிலும் தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்படுவதுடன் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை உள்ளடக்கிய விசேட குழு ஐக்கியமக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-8)

# வாணி விழா

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்றம் நடாத்தும் வாணி விழா நிகழ்வு இன்று தொடக்கம் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை இளங்கலைஞர் மன்ற கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இன்று மாலை 5.25மணிக்கு மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகி தொடர்ந்து ஈழ நல்லூர் பி.எஸ்.பாலமுருகன் பி.எஸ்.செந்தில்நாதன் குழுவினரின் மங்கள இசையும் இரவு 6.30 மணிக்கு சிறி.நந்தகோபன் குழுவினரின் இசைக்கச்சேரியும் 7.15 மணிக்கு பிரதமவிருந்தினரான ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி இ.ஏகநாதனின் உரையுடன் நிறைவு பெறவுள்ளது. (த-9)

# பக்திப் பாமாலை வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலய ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஆதரவில் வல்லிபுர ஆழ்வார் பக்திப்பாமாலை இறுவெட்டு /ஒலிநாடா வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மத்தியகல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் பிரதிக்கல்விப்பணிப்பாளர் யோ.ரவீந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வெளியீட்டு உரையை ஆசிரியர் ந.விஜயசுந்தரம் ஆற்றவுள்ளார். (ச)

# யாழ்.பிரதான...

சிலும் கடமையாற்றியதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவ இடத்திற் குச்சென்ற யாழ். மாவட்ட மேலதிகநீதிவான் சிறிநிதி நந்தசேகரன் விசாரணைகளை மேற் கொண்டதுடன் மருத்துவ பரிசோதனைக் காகசடலத்தை யாழ்.போதனாவைத்திய சாலையில் ஒப்படைக்குமாறு உத்தர விட்டார். இதே வேளை யாழ்.குடாநாட்டில் கடந்த ஒருவார காலத்திற்குள் ஐவர் சுட்டுக்கொல் லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-9,130,4)

# மோட்டார்சைக்கிள்...

களின் தந்தையான் லோறஸ் ஜேசுரட்ணம் (வயது 25) என்பவரே உயிரிழந்தவராவார்.

காயமடைந்தவர் அதே இடத்தைச் சேர்ந்த பாலசுந்தரம் விஜயரட்ணம்.(வயது 31) எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-126)

# வேட்பாளர்களின் சின்னங்கள்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் 13 வேட்பாளர்களின் சின்னங்களும் நேற்று தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக்கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க யானைச்சின்னத்தின் கீழும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ வெற்றிலைச் சின்னத்தின் கீழும், ஐக்கிய லலித் முன்னணியின் வேட்பாளர் அனுரா சரத்சில்வா அன்னப்பறவைச்சின்னத்தின் கீழும் போட்டியிடுவர்.

தேசிய அபிவிருத்தி முன்னணியின் வேட்பாளர் அச்சல சுரவீர தேங்காய்ச் சின்னத்தின் கீழும்,ஐக்கிய இலங்கை பொதுஜனக் கட்சியின் வேட்பாளர் விக்டர் ஹெட்டி கொடடி சில்வா கோப்பைச் சின்னத்தின் கீழும், ஐக்கிய ஜனநாயக கூட்டமைப்பின் வேட்பாளர் ஏ.கே. ஜயவீர ஆராட்சி லாகே கடதாசிகள் சின்னத்தின் கீழும்,ரூகுணை மக்கள் கட்சியின் வேட்பாளர் அருணசொய்ஸா கார் சின்னத்தின் கீழும் ,

சோசலிச சமத்துவக்கட்சியின் வேட்பாளர் விஜயடயஸ் கத்திரிக்கோல் சின்னத்தின் கீழும் போட்டியிடுகின்றனர்.

ஐக்கிய தேசிய மாற்று முன்னணியின் வேட்பாளர் சனத்தர்மத்வஜ கேட் சின்னம் , புதிய இடதுசாரி முன்னணியின் வேட்பாளர் சமில் ஜயனெத்தி மேசைச்சின்னம்,இலங்கை முற்போக்கு முன்னணியின் வேட்பாளர் ஏ.ஏ.பி.நெல்சன்பெரேரா பூச்சாடிச்சின்னம், ஐக்கிய சோசலிசக் கட்சியின் வேட்பாளர் சிறிதுங்க ஜெயசூரிய முச்சக்கர வண்டிச்சின்னம் இலங்கை தேசிய முன்னணியின் வேட்பாளர் விமல் கீகனகே துடுப்பாட்ட மட்டைச்சின்னம் கீழும் போட்டியிடவுள்ளனர். (ச-4)

# வெட்டுப்புள்ளிகள் டிச. 20-இல் வெளியாகும்

(கொழும்பு)

2005/2006 கல்வியாண்டில் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான வெட்டுப்புள்ளிகள் எதிர்வரும் டிசம்பர் மாதம் 20ஆம் திகதி வெளியிடப்படுமென பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் ஆர்.பி.மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 27ஆம் திகதிக்கும் 2006ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்குமிடையில் மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்குமாறு பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் அனைத்துப் பல்கலைக்கழகங்களும் ஒரேசமயத்தில் புதிய பிரிவின் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்கவேண்டுமென அவர் அறிவித்துள்ளார். (ச-8)

# இராணுவத் தளபதியுடன் இந்.இராணுவக்குழு சந்திப்பு

(கொழும்பு)

இராணுவத்தளபதி சாந்தகொட்டே கொடவை இலங்கை வந்துள்ள இந்திய இராணுவக்குழுவினர் நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இவ் இந்தியக் குழுவில் மூன்று பேர் இடம்பெற்றிருந்தனர். மேஜர் ஜெனரல் கே.எஸ்.சிவக்குமார் தலைமையில் கடற்படையைச் சேர்ந்த சார்துள் நௌதெல், விமானப்படை அதிகாரி கே.பி.எஸ்.விர்க் உள்ளிட்டோர் இக்குழுவில் அடங்கு கின்றனர்.

இராணுவத்தளபதி சாந்த கொட்டேகொடவை இராணுவத் தலைமையகத்தில் நல்லெண்ண அடிப்படையில் இச் சந்திப்பு இடம் பெற்றுள்ளதாக இராணுவத்தரப்பினர் தெரிவித்தனர். (ச-4)



யாழ்.பிரதான வீதியில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்ட பூசகரைப் படத்தில் காணலாம்.

# அமைதிப் பேச்சுக்கள்...

இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவர் மேஜர் ஜெனரல் டொன்புருவ் ஹெவ்டே நாளை மறுதினம் இலங்கை வருகின்றார்.

எதிர்வரும் 18ஆம் திகதிவரை அவர் இலங்கையில் தங்கியிருப்பார். தங்கியிருக்கும் காலத்தில் அரசு மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை நடாத்தவுள்ளார்.

இலங்கையின் பாதுகாப்பு நிலைமைகள் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துதல் ஆகியவை குறித்து இப்பேச்சுக்களில் ஆராயவுள்ளார்.

முஸ்லிம் அமைதிச் செயலகப்பிரதிநிதிகள் மற்றும் டோக்கியோ இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகளையும் டொன்புருவ் ஹெவ்டே சந்திக்கவுள்ளார் என நோர்வேத் தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் முன்னாள் தலைவரும் மனித உரிமை ஆர்வலருமான இயன் மார்ட்டின் எதிர்வரும் 13ஆம் திகதியன்று கிளிநொச்சியில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்திக்கவுள்ளதாக விடுதலைப்புலிகளின் சமாதான செயலகம் தெரிவித்துள்ளது. (ச-4.8)

NEW M.T.C
54/B. பருத்தித்துறை வீதி யாழ்.

வெளிநாடுகளில் வேலை வாய்ப்பைப் பெற்று அல்லது சுயதொழில் வாய்ப்பின் மூலம் மாதாந்தம்,

ரூபா 20,000/= - 50,000/= வரை வருமானம் பெறக்கூடிய பயிற்சி நெறிகள் ஆரம்பம் *15.10.2005*. பயிற்சி முடிவில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.

மேலதிக விபரம் அறிய 0779 172352

-நிர்வாகி

மனோகரா யாழ்.

இளைய தளபதி விஜய் . ஜோதிகா .விவேக் நடித்த

திருமலை

கா.நே. 10.30.2.30.6.30.9.30 (பு.நே)

11.10.2005 முதல்

பார்த்திபன் .லட்சுமிராய். வடிவேல் நடித்த

குண்டக்க மண்டக்க...

நாதன்ஸ் யாழ்ப்பாணம்.

சரத்குமார். வைகைப்புயல் வடிவேலு நமீதா நடித்த

சாணக்கியா

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30(பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை

ரவிகிருஷ்ணா .கோபிகா நடித்த

பொன்னியின் செல்வன்

கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

இப்பத்திரிகை வலம்புரி அன்.[illegible] ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.